உ

சிவமயம்

பட்டினத்துப் பிள்ளையார்

# திருப்பாடற்றிரட்டும்

உடற்கூற்றுவண்ணமும்

சேந்தனர் திருப்பல்லாண்டும்.

OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS
11 SEP 1957

★

தமிழ்ப்புண்டிதர்

T. உ. பார்த்தசாரதி அய்யங்கார் எழுதிய

அணிந்துரை, அறநெறிமார்க்கங்கள், குறிப்புவிளக்கத்துடன்

சரித்திர ஐதீகப்படங்கள் அடங்கியது.

ACL-TNAL
00732
680

★

கிடைக்குமிடம்:

சரஸ்வதி புத்தகசாலை

நெ-175. செட்டியார் தெரு,

கொழும்பு

காபிரைட்] 1957 விலை 8 அணா / 50 ந. பை.

அச்சிட்டவர், வெளியிட்டவர்
அமரம்பேடு. குழந்தைவேல் முதலியார்
தெய்வமகள் விலாச அச்சகம்
கெ-24. தாண்டவராயப்பிள்ளை வீதி,
சௌகார்பேட்டை போஸ்டு, சென்னை—1.

ஆசிரியர்:—காலஞ்சென்ற பட்டினத்துப்பிள்ளையார்
சோழநாட்டிலுள்ள காவிரிப்பூம்பட்டினத்திலிருந்தவர்.



பட்டினத்துப்பிள்ளையார்

உ

பட்டினத்துப் பிள்ளையார்

# சரித்திரப் படங்கள்


| பெயர் | பக்கம் |
|---|---|
| பட்டினத்துப் பிள்ளையார் | 3 |
| சிவசருமரும் அவர் மனைவியரும் சிவபிரானாகிய குழந்தையைக் கண்டெடுத்தல் | 17 |
| குழந்தையைப் பரிவர்த்தனைசெய்து பொன்கொளல் | 25 |
| ஊசியைக் கண்ட சுவேதாரணியர் உண்மையில்லை அறிதல் | 33 |
| பத்திரகிரியாரின் ஆணைகொண்ட சேவகர் அடிகளைத் தளையிட்டுக்கொண்டேகல் | 41 |
| பட்டினத்தாரின் அருட்பெருமை வெளிப்பட கழுமரம் பற்ற அரசன் சிறப்புறல் | 49 |
| பட்டினத்தார் தாயாருக்கு ஈமக்கடன் செலுவி நடத்தல் | 56 |
| பட்டினத்தடிகள் இறைவனுருவடைதல் (ராப்பர்) | |

# உட்பொருள் விளக்கம்


| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| அணிந்துரை | ... | 6 |
| அறநெறி மார்க்கங்கள் | ... | 9 |
| பட்டினத்தார் பாடிய 1-வது கோயிற்றிருவகவல் | | 13 |
| 2-வது கோயிற்றிருவகவல் | ... | 14 |
| 3-வது கோயிற்றிருவகவல் | ... | 16 |
| 4-வது கச்சித்திருவகவல் | ... | 18 |
| திருவேகம்பமாலை | ... | 21 |
| சட்டைக்கலிப்பா | ... | 28 |
| திருத்தில்லை | ... | 28 |
| திருச்செங்காடு | ... | 31 |
| திருவொற்றியூர் | ... | 32, 50 |
| திருவிடைமருதூர் | ... | 32 |
| திருக்கழுக்குன்றம் | ... | 32 |
| திருக்காளத்தி | ... | 34, 51 |
| திருக்கைலாயம் | ... | 35 |
| மதுரை | ... | 36 |
| பொது | ... | 36, 52 |
| தாயாருக்குத் தகனகிரியை செய்கையிற் பாடியது | | 47 |
| திருவிடைமருதூர் | ... | 48 |
| திருவாரூர் | ... | 50 |
| திருக்காஞ்சி | ... | 51 |
| திருக்காரோணம் | ... | 51 |
| திருவிருப்பையூர் | ... | 51 |
| திருவையாறு | ... | 51 |
| திருக்குற்றாலம் | ... | 51 |
| திருவெண்காட்டுத் திருவிசைப்பா | ... | 52 |
| பின்முடுகு வெண்பா | ... | 53 |
| கலியாணவீட்டில் தம்பதிகளைப்பார்த்து பாடிய விருத்தம் | | 55 |
| உடற்கூற்றுவண்ணம் | ... | 57 |
| சேந்தனார் பாடிய திருப்பல்லாண்டு | ... | 61 |

# அணிந்துரை

காவிரிப் பெருக்கால் வண்மை நிறைந்த சோணாட்டினுள்ள காவிரிப்பூம் பட்டணத்தில் வேளாண் மரபிலே பட்டினத்துப் பிள்ளையார், கடலிடை முத்தென வந்து அவதரித்தார். அவ்வவதாரம் இற்றைக்கு ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகட்கு முன்பென ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

இவர் கல்வியால் ஞானங் கனிந்து, கடவுள் பக்தியால் முதிர்ந்து உலகின் இழிவை உன்னி உன்னி மனங் கலங்கி வாடின முகத்தினராய் வருந்தி நிற்கும்வேளையில் மனைவியார் ஒரு சிறிய பெட்டி கொண்டுவந்து "நாதா! நம் அன்பன் இப்பேழையைத் தமதிடம் சேர்க்கும்படிச் சொல்லிப் போந்தனன்" என்று கூறி அவர் முன்வைக்க, அதை அவர் ஆவலோடு திறந்தார்; அதில் காதற்ற ஊசியொன்றும் ஓலைச்சீட்டு ஒன்றும் இருந்தன. பட்டினத்துப்பிள்ளையார் ஓலையை யெடுத்து வாசித்தார். அவ்வோலையில் "காதற்ற வூசியும் வாராது காணும் கடைவழிக்கே" என்று எழுதப் பெற்றிருந்தது. அந்த ஞான உரையைக் கண்டதும் பட்டினத்தார் துறவறம் மேற்கொண்டார் இவரது துறவுக்கு இணையானது எந்நாட்டி னரகத்துங் காண்பது அரிது.

இவ்வரும் பெருந்துறவின் தூய்மையைத் தாயுமானாரும் "பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப் போல் யாருந் துறக்கை அரிதரிது" எனப் புகழ்ந்துள்ளார்.

இவர் தம் பொருளைப் பிறரால் கொள்ளை இடுவித்துத் தாயாரின்பொருட்டு வெளியூர்க்கேகாது, அவர் பட்டணத்தின் ஒரு பாங்கரிலுள்ள ஒரு பொது மண்டபத்திற்றங்கி வீடுகள்தோறும் சென்று பிச்சையேற்று உண்டு, ஞான நிஷ்டை செய்துகொண்டிருந்தார். அப்போது அவரது நல் பண்பும் வைராக்கிய வன்மையும் புலமைப் பெருக்கும் நாவின் வன்மையும் நானிலம் வியக்க வெளிப்படலாயின.

இவர் ஓரிடத்தும் நில்லாமல் பைத்தியம் கொண்டவரைப்போலத் திரியலாயினர். அவரது செயல் தன் சுற்றத்தார்க்கு வெறுப்பைத்தந்தது அவரது தமக்கையார் தம்மெதிரிற் பற்பல வீடுகள்சென்று பிச்சைபெற்று நமது மானத்தை அழிக்கும் அண்ணலைக் கொல்லவேண்டும் என உறுதிகொண்டு, நஞ்சுகலந்த ஓர் அப்பத்தினை உண்ணும்படி பட்டினத்தடிகளுக்கு அனுப்பிவைத்தார் அவ்வஞ்சனையை திரு அருளால் உணர்ந்த அவர் அதனைப் பிட்டு ஒரு பகுதியைத் தமக்கையார் வீட்டிறப்பிற் செருகினர்; செருகினதும் வீடு தீக்கிரையாயிற்று. அக்கால் பட்டினத்தாரின் துறவுநிலை உலகினர் உள்ளத்தைக் கவர்ந்தன. பின்னர் மக்களாலறிந்த அந்நாட்டரசன் ஓடோடிவந்து அவரைக் கண்டும் மனமெலிந்தும் ஒன்றும் பேசமுடியாறுய் "அந்தோ! ஏனையா உமக்கு இக்கோலம்" என, அவர் "நான் இருக்க நீ நிற்க" என, "துறவிக்கு வேந்தன் துரும்பு என்பது அறியீர் போலும்" என்று புன்னகை புரிந்தார்.

ஒன்னுள் அடிகள் அன்னையாரின் இறுதிக்கடனை ஆற்றவேண்டி ஆண்டே வதிந்து இருந்தார். அவர் துறவினை மேற்கொண்டும் அது வாய்க்கும் சமயம் நோக்கி, இனிக் குடியிருந்த வீட்டில் கொள்ளிவைத்தலே தலையான பணியாகும் என்று சொல்லிவந்தார்.

அரன் அருளால் அன்னையார் அரனடி நீழலை யடைந்தார். அவளது உடலைச் சுற்றத்தார் மயானங் கொண்டேக, இடைதடுத்து, அன்னையைப் பச்சை வாழைப்பட்டைகளை படுக்கி, "அன்னை யிட்டதீ அடிவயிற்றிலே" எனப் பாட, அனல் மூண்டு கொழுந்து விட்டெரிந்தது. அப்போது அடிகள் தன்னை மறந்து பழமை நினைந்து தேம்பித் ததும்பி கண்ணீர் விடுத்து மண்ணீர் ஓட புலம்பியவைக் கேட்டாரை

யும் கதறச் செய்யவல்லதாகும் என்ருல் இனிக் கூறுவது மிகையேயாம்.

பட்டினத்தடிகளின் உண்மைத் தோழராகிய சேந்தனுர் பொருள் கொள்ளைக்காரணமாக உண்மை யறியாத அரசன அச்சேந்தனுரைச் சிறைப்படுத்தி இருக்தலே, இவர் அன்னவர் மனைவியால் அறிந்து மனம் வருந்தியவராய் "மத்தளைத் தயிருண்டானும்" என்கிற பிரார்த்தனைப் பாடலைப் பாடித் தம் தோழர் சிறை நீக்கியது உலகம் அறியும்,

பின்பு அடிகள் பற்பல திவ்ய திருப்பதிகளைத் தரிசித்து! ஆங்காங்கு சிற்சில ஆற்புத செய்கைகளைக் காட்டித் துளுவ நாடு புகுந்து, பந்திரகிரியாரைந் தன் சீடனுகக் கொண்டு அவருக்கு ஞானேபதேசம் செய்தார். பத்திரகிரியார் தன் மனநிலையை வெளிபாக்க நினைத்து தன்னுல் வளர்த்த நாய் இறந்து பின் காசிமன்னன் புதல்வியாகப் பிறந்து வளர்ந்து இறுதியாக அப்பத்திரகிரியாரை அடிகள் காண விழுந்து வணங்கினுள் அதுகாலை ஒரு பெருஞ் சோதி தோன்றிற்று; அதிலே இருவரும் கலந்தருளினுர்கள்.

அவ்வற்புதத்தைக் கண்ட பட்டினத்தடிகள் சிவசந்நிதியடைந்து, "அருட்கடலே! அடியேனை இவ்வுலகத்தில் இருத்தியிருப்பதன் குறிப்பு என்னவோ அறிகிலேன்?" என்று முறையிட்டனர். அதுபோழ்து "திருவெண்காட, ஒற்றியூர் வருக" என்ருேர் அசரீரி எழுந்தது.

இவர் பாடிய நூல்களை நம்பியாண்டார்நம்பி யதினுேரும் திருமுறையில் சேர்த்துள்ளனர். அவைகள் கற்ருேர் மனங் களிக்கவைப்பனவாம். இறுதியாக அடிகள் திருவொற்றியூர் போந்து, அவ்வொற்றியாரைப் பாடிச் சிவலிங்கத் திருமேனி கொண்டார்.

# பட்டினத்தடிகள் அறநெறி மார்க்கங்கள்

1. இறைவனை நினைத்தலையே ஆன்மாக்கள் கடைப் பிடித்தல் வேண்டும். நிலையற்ற பொருளை நினையாதே எனத் தன் மனத்திற்கு அறிவு கொளுத்தினர்.

2. மனமே! காமத்தைக்கடிந்து, போகத்தை விடுத்துப் பகவன் நாமத்தில் நிலைத்து நில்.

3. அரன், அபயம் அடைந்தவரை ஆபத்திலிருந்து காப்போன் என்பதை உதாரணவாயிலாக விளக்குதல்.

4. அடிகள் மானிடப் பிறவியின் அருமையினை வகுத்துக்கூறலும், அப்பிறவியின் ஆபாசமும், அவற்றில் அடைய வேண்டிய நன்மைகளையும் தொகுத்துக் கூறியதும் வியப்பு.

5. ஆசைகள் மூத்திறப்படுமென்றும், அவைகளை அறுத்துக் களைந்தவனே அரனடி சேருதற்கு அருகதை யுடையோன் என்பதை வற்புறுத்தியது காண்க.

6. அரன் பூசையில் ஆடம்பரம் வேண்டாம்.

7. வேசையராசை விமலனடி சேருவதற்கு எதிரான கல் என்றார்.

8. இல்லறத்தின் சிறப்பும், துறவறத்தின் தூய்மையும் எழில்பெற எடுத்து இயம்பி, துறவறமே சாலச் சிறந்தது எனக் கூறுவது தன் மனக்கொள்கை நிறுத்தல்.

9. துறவறத்தினர் கைப்பிடிக்க வேண்டிய மார்க்கத்தை மிகவும் விரிவாக எடுத்துப் புகன்றமை அறிக.

10. நல்லோர் இலக்கணத்தையும், தீயோர் இலக்கணத்தையும் வகுத்துரைத்த வாசகங்கள் பிறர் மனத்தை உருக்குங் கருவியாம்.

11. பொய் பேசுதலை இழித்துக்கூறியும், மெய் பேசுதலின் சிறப்பைப்போற்றியும், அது உற்ற துணையாவதையும் விளக்கியமை காண்க.

12. இன்னேரே செல்வமுடையவர் என்னும் அறவுரை காண்க.

13 ஆன்மாக்களுக்கு உற்றதுணையாவது அறமேயாம் என்பது, அது எம்மதத்தினரும் இன்றியமையாமல் கடைப்

பிடிக்கும் நெறியாலதென அடிகள் விளக்குதல் அருமையி லருமை.

14. அடிகள் ஏழைமக்களுக்கு இரங்கிக்கூறும் மன நிலை அறிக.

15. மாதர்களின் இழிவும், அவர்களை நம்பினோரின் துன்பமுங் கூறுதல் உலக வியல்பு கூறுதல்

16. சிவநிந்தை செய்வோரிடம் அணுகலும் ஆகாது என்னும் கருத்தைக் கடைப்பிடிக்க

17. இறை நாமச்சிறப்பை மறவாமை அமைத்துப் பேசியதறிக.

18. ஞானமாகிய அமிர்தத்தின் சுவையினை சிறிதும் அறியாதவர் விஷயமாகிய அமிர்தத்தின் சுவையினை நன் மையதாகக் கருதுவர் அமைத்தமை அற்புதம்.

19. "ஆனந்தக் காட்சியில் ஏதம் களைந்து இருப்பேன்" "நல்லாய் எனக்கு மனுவொன்று தந்தருள்" என்ற சொற் றொடரமைப்பின் உண்மை அறிந்துய்க.

20. ஊண் உண்பவர்கள் அடையும் துன்பத்திற் கிரங் கிய அடிகளின் வார்த்தையால் உயிர்களின் துயர்நிலைகாண்க.

21. அன்னதானத்தின் அருமையும், அதனைச் செய் யும் இல்லற வாழ்க்கைப் பெருமையும் வகைபட அறிவுறுத் தியது அறிக.

22. கல்வியுடையான், கடவுளுடையான் என்ற கருத் தைத் தெளிக.

23. மறுமை அடைய வழிதேடும் மாந்தர்களின் இலக் கணமும், இம்மையில் வாழவிழையும் மாந்தர்களின் இலக் கணமும் தொகுத்துச் சுருக்கி உரைத்தமை அறிக.

24. ஏற்பார்க்கு இல்லை என்பதற்கு அடிகள் எடுத்து உரைத்த வாக்கிய திறம் விந்தை.

25. வினைத்திறத்தின் வேற்றுமை கூறிப் போதலைக் கண்டு தெளிக.

26. மகன் கடமையை மானிலம் அறிய வைத்தமை அறிக.

டி. வி. பா.

# பாட்டு முதற்குறிப்பு அகராதி


| பாடல் | பக்கம் |
|---|---|
| **அ** | |
| அஞ்சக்கர | 44 |
| அடியாருறவு | 45 |
| அடியார்க் | 30 |
| அட்டாங்க | 40 |
| அண்ணறன் | 40 |
| அத்தமும் | 38 |
| அத்தனை | 31 |
| அத்திமுத | 51 |
| அப்பென்றும் | 24 |
| அரிசியோ | 47 |
| அழலுக்குள் | 29 |
| அழுதாற்பய | 43 |
| அள்ளியிடுவ | 47 |
| அறந்தான் | 21 |
| அன்னவிசார | 22 |
| அன்னையெத் | 28 |
| **ஆ** | |
| ஆங்காரப் | 45 |
| ஆயும்புகழ்த் | 20 |
| ஆயும்பொழுது | 44 |
| ஆயாய் | 45 |
| ஆரூராரிங் | 50 |
| ஆவியொடு | 53 |
| ஆறுண்டு | 38 |
| ஆற்றிற்கரை | 24 |
| ஆற்றோடு | 31 |
| **இ** | |
| இப்பிறப்பை | 53 |
| இருக்குமிடங் | 53 |
| இருப்பதுபொய் | 55 |
| இல்லந்துறந்து | 35 |
| இறைக்கே | 34 |
| இன்னம்பிறக்க | 54 |
| **உ** | |
| உடுக்கக் | 39 |
| உடுப்பானும் | 30 |
| உடைகோவண | 36 |
| உண்டதே | 52 |
| உரைக்கைக்கு | 42 |
| உளியிட்ட | 46 |
| **ஊ** | |
| ஊட்டுவிப்பானு | 30 |
| ஊரீருமக்கோ | 43 |
| ஊருஞ்சதமல்ல | 23 |
| ஊற்றைச்சடல | 26 |
| **எ** | |
| எச்சிலென்று | 54 |
| எட்டுத்திசை | 42 |
| எத்தனைநாள் | 54 |
| எத்தனைபேர் | 54 |
| எத்தனையூ | 50 |
| எத்தொழிலைச் | 55 |
| எரியெனக் | 40 |
| எருமுட்டை | 45 |
| எருவாய்க் | 50 |
| எல்லாமறிந்து | 27 |
| என்செயலாவ | 39 |
| என்பெற்ற | 40 |
| **ஏ** | |
| ஏதப்பட்டா | 42 |
| **ஐ** | |
| ஐயிரண்டு | 47 |
| ஐயுந்தொடர்ந்து | 32 |
| **ஒ** | |
| ஒடுவிழுந்து | 50 |
| ஒருமடமாது | 57 |
| ஒழியாப்பிறவி | 46 |
| ஒன்பதுவாய்த் | 54 |
| ஒன்றென்றிரு | 39 |
| **ஓ** | |
| ஓங்கார | 43 |
| ஓடாமற் | 29 |
| ஓடுமெடுத்தத | 30 |
| ஓயாமற்பொய் | 24 |
| **க** | |
| கச்சிறகிடக் | 46 |
| கடுஞ்சொல் | 28 |
| கட்டியணைத் | 21 |
| கண்டங்கரி | 50 |
| கண்ணுண்டு | 37 |
| கல்லாப்பிழை | 22 |
| கல்லார் | 24 |
| கறையற்ற | 40 |
| காடேதிரிந் | 32 |
| காடோசெடி | 32 |
| காதளவோடிய | 14 |
| காதென்று | 22 |
| காம்பிணங்கும் | 28 |
| காலன்வரு | 51 |
| காலையுபாதி | 29 |
| கான்சாயும் | 35 |
| கைப்பிடிநாய | 21 |
| கையாரவேற்று | 35 |
| கையொன்று | 37 |
| கொல்லாமற | 29 |
| கொன்றே | 28 |
| **ச** | |
| சடக்கடத் | 27 |
| சற்றுகினுங் | 46 |
| சிற்றம்பலமுஞ் | 52 |
| சினந்தனை | 35 |
| சீதப்பணி | 38 |
| சீயுங்குருதி | 38 |
| சீறும்வினை | 23 |
| சுடப்படு | 32 |

| பாடல் | பக்கம் | பாடல் | பக்கம் | பாடல் | பக்கம் |
|---|---|---|---|---|---|
| சுரப்பற்று | 42 | நெருப்பான | 31 | முதற்சங் | 54 |
| சூதற்ற | 37 | நேமங்க | 44 | முந்தித்தவங் | 47 |
| செல்வரைப் | 43 | நொந்துசுமந்து | 47 | முப்போது | 34 |
| செல்வரைப்பின் | 35 | ப | | முன்னையிட்டதீ | 48 |
| சொக்கிட | 27 | பட்டைக் | 37 | மென்று | 48 |
| சொல்லால் | 26 | பத்தும் | 34 | மேலுமிருக்க | 53 |
| சொல்விலுஞ் | 37 | பருத்திப் | 23 | மையாடு | 45 |
| சோறிடுநாடு | 28 | பாராமல் | 29 | யா | |
| த | | பாற்கடல் | 16 | யாவரே | 52 |
| தவியாதிரு | 31 | பிறக்கும் | 22 | | |
| தாயாருஞ் | 44 | பிறந்துமண் | 26 | வ | |
| தாயும்பகை | 32 | பிறவாதிருக்க | 31 | வட்டிலிலுங் | 47 |
| திருமால்பயந்த | 18 | பூதங்களற்று | 26 | வரிக்கோல | 22 |
| திருவேடமாகித் | 40 | பூதமுங் | 52 | வருந்தேன் | 36 |
| தெய்வச் | 30 | பூணும்பணி | 45 | வாசற்படி | 52 |
| தோடவிழும் | 52 | பெண்ணாகி | 24 | வாதுக்குச் | 23 |
| ந | | பேய்போற் | 42 | வாதுற்ற | 38 |
| நச்சரவம் | 53 | பொய்யை | 51 | வாய்நாறு | 42 |
| நல்லாயெனக்கு | 27 | பொருளுடை | 23 | வாவியெல்லாந் | 50 |
| நல்லார் | 21 | பொல்லாவிரு | 23 | வாளான் | 34 |
| நன்னாரிற் | 21 | பொல்லாதவ | 22 | வானமு | 26 |
| நாடிக்கொண் | 36 | பொன்னாற் | 34 | விடக்கே | 43 |
| நாட்டமென் | 39 | பொன்னை | 27 | விடப்படு | 36 |
| நாப்பிளக்கப் | 55 | ம | | விட்டுவிடப் | 53 |
| நாயாய்ப் | 24 | மந்திக் | 36 | விட்டே | 40 |
| நாய்க்குண்டு | 44 | மண்ணுந் | 51 | விதியார் | 43 |
| நாய்க்கொரு | 46 | மனையாளு | 38 | வித்தாரம் | 30 |
| நாலின்மறை | 31 | மாடுண்டு | 39 | விருந்தாக | 27 |
| நாவார | 24 | மாதாவுடல் | 51 | வினைப்போக | 37 |
| நாறுங்குருதி | 34 | மாத்தா | 39 | வீடுநமக்குத் | 36 |
| நாறுமுடலை | 27 | மாயநட் | 22 | வீற்றிருந்தா | 48 |
| நானெத்தனை | 44 | மாலைப்பொழு | 55 | வெட்டாத | 45 |
| நினைமின் | 13 | மானார்விழி | 46 | வெந்தாளோ | 43 |
| நீரூர்த்த | 35 | முடிசார்ந்த | 29 | வேகுதே | 48 |
| நீற்றைப் | 43 | முட்டற்ற | 26 | வேதத்தி | 38 |

உ

பட்டினத்துப்பிள்ளையார் அருளிய

# திருப்பாடற்றிரட்டு

## * 1-வது கோயிற்றிருவகவல்

நினைமின் மனனே! நினைமின் மனனே!
சிவபெரு மானைச் செம்பொனம் பலவனை
நினைமின் மனனே! நினைமின் மனனே!
‡ அலகைத் தேரி னலமரு காலின்
உலகப்பொய் வாழ்க்கையை யுடலையோம் பற்க
பிறந்தன விறக்கு மிறந்தன பிறக்குந்
தோன்றின மறையு மறைந்தன தோன்றும்
பெருத்தன சிறுக்குஞ் சிறுத்தன பெருக்கும்
உணர்ந்தன மறக்கு மறந்தன வுணரும்
புணர்ந்தன பிரியும் பிரிந்தன புணரும்
அருந்தின மலமாம் புனைந்தன வழுக்காம்
உவப்பன வெறுப்பாம் வெறுப்பன வுவப்பாம்
என்றிவை யனைத்து முணர்ந்தனை யன்றியும்
பிறந்தன பிறந்தன பிறவிக டோறும்
கொன்றனை யனைத்து மனைத்துநினைக் கொன்றன
தின்றனை யனைத்து மனைத்துநினைத் தின்றன
பெற்றன யனைத்து மனைத்துநினைப் பெற்றன
ஓம்பினை யனைத்து மனைத்துநினை யோம்பின
செல்வத்துக் களித்தனை தரித்திரத் தழுங்கினை
சுவர்க்கத் திருந்தனை நரகிற் கிடந்தனை
இன்பமுந் துன்பமு மிருநிலத் தருந்தினை
ஒன்றொன் றொழியா துற்றனை யன்றியும்
புற்புதக் குரம்பைத் துச்சி லொதுக்கிடம்
என்னநின் றியங்கு மிருவினைக் கூட்டைக்
கல்லினும் வலிதாக் கருதினை யிதனுள்

---

* கோயிற்றிருவகவல்-சிதம்பரத்தைப்பற்றியவிஷயப்பாடல்.

‡ அலகை - பிசாசு.

பீளையு நீரும் புறப்படு மொருபொறி
மீளுங் குறும்பி வெளிப்படு மொருபொறி
சளியு நீருந் தவழு மொருபொறி
உமிழ்நீர் கோழை யொழுகு மொருபொறி
வளியு மலமும் வழங்கு மொருவழி
சலமுஞ் சீயுஞ் சரியு மொருவழி
உள்ளுறத் தொடங்கி வெளிப்பட நாறும்
சட்டக முடிவிற் சுட்டெடு மும் பாகும்
உடலுறு வாழ்க்கையை யுள்ளுறத் தேர்ந்து
கடிமலர்க் கொன்றைச் சடைமுடிக் கடவுளை
ஒழிவருஞ் சிவபெரும் போகவின் பத்தை
நிழலெனக் கடவா நீர்மையொடு பொருந்தி
எனதற நினைவற விருவினை மலமற
* வரவொடு செலவற மருளற விருளற
இரவொடு பகலற விகபர மறவொரு
முதல்வனைத் தில்லையுண் முளைத்தெழுஞ் சோதியை
அம்பலத் தரசனை யானந்தக் கூத்தனை
நெருப்பினி லரக்கென நெக்குநெக் குருகித்
திருச்சிற் றம்பலத் தொளிருஞ் சிவனை
நினைமின் மனனே ! நினைமின் மனனே !
சிவபெரு மானைச் செம்பொனம் பலவனை
நினைமின் மனனே ! நினைமின் மனனே !

## 2-வது கோயிற்றிருவகவல்

காதள வோடிய கலகப் பாதகக்
கண்ணியர் மருங்கிற் புண்ணுட னுடங்
காதலுங் கருத்துமல் லானின் னிருதாட்
பங்கயஞ் சூடப் பாக்கியஞ் செய்யாச்
சங்கடங் கூர்ந்த தமியேன் பாங்கிருந்து
அங்கோ டிங்கோ டலமருங் கள்வர்
ஐவர் கலகமிட் டலைக்குங் கானகம்

* வரவொடுசெலவு - பிறப்பிறப்பு.

சலமலப் பேழை யிருவினைப் பெட்டகம்
வாதபித் தங்கோழை குடிபுகுஞ் சீறூர்
ஊத்தைப் புன்றோ லுதிரக் கட்டளை
நாற்றப் பாண்ட நான்முழத் தொன்பது
பீற்றற் றுண்டம் பேய்ச்சுரைத் தோட்டம்
அடலைப் பெரிய சுடலைத் திடருள்
ஆசைக் கயிற்றி லாடும் பம்பரம்
ஓயா நோய்க்கிட மோடு மரக்கலம்
மாயா விகார மரணப் பஞ்சரம்
சோற்றுத் துருத்தி தூற்றும் பத்தம்
காற்றிற் பறக்குங் ககனப் பட்டம்
விதிவழித் தருமன் வெட்டுங் கட்டை
சதுர்முகப் பாணன் றைக்குஞ் சட்டை
* ஈமக் கனலி லிடுசில விருந்து
காமக் கனலிற் கருகுஞ் சருகு
§ கிருமி கிண்டுங் கிழங்கஞ் சருமம்
பவக்கொழுந் தேறுங் கவைக்கொழுக் கொம்பு
மணமாய் நடக்கும் வடிவின் முடிவிற்
பிணமாய்க் கிடக்கும் பிண்டம் பிணமே
ஊரிற் கிடக்க வொட்டா வுபாதி
காலெதிர் குவித்த பூளை காலைக்
கதிரெதிர்ப் பட்ட கடும்பனிக் கூட்டம்
அந்தரத் தியங்கு மிந்திர சாபம்
அதிரு மேகத் துருவி னுருவிழல்
நீரிற் குமிழி நீர்மே லெழுத்து
கண்டுயில் கனவிற் கண்ட காட்சி
அதனிலும் பொல்லா மாயக் களங்கம்
அமையு மமையும் பிரானே யமையும்
இமய வல்லி வாழியென் றேத்த
ஆனந்தத் தாண்டவங் காட்டி
ஆண்டுகொண் டருள்கைநின் னருளினுக் கழகே.

---

* ஈமம் - சுடுகாடு. § கிருமி - புழுகு.

## 3-வது கோயிற்றிருவகவல்

பாற்கடல் கடையப் படுங் * கடு வெண்ணெயைத்
திருமிடற் றடக்கிய சிவனே யடைக்கலம்
அடங்கலு மடக்கிடுங் கடுங்கொலைக் காலனைக்
காலெடுத் தடக்கிய கடவுணின் னடைக்கலம்
உலகடங் கலும்படைத் துடையவன் றலைபறித்
திடக்கையி லடக்கிய விறைவ! நின் னடைக்கலம்
செய்யபொன் னம்பலச் செல்வநின் னடைக்கலம்
ஐயநின் னடைக்கல மடியனின் னடைக்கலம்
மனவலை யலைத்திடுங் கனவெனும் வாழ்க்கையும்
விழுப்பொரு ளறியா வழக்குறு மனனும்
ஆணவ மலத்துதித் தளைந்ததி லுளைந்திடு
நிணவைப் புழுவெனு நெளித்திடு சிந்தையும்
படிறும் பாவமும் பழிப்புறு நினைப்பும்
தவறு மழுக்காறு மிவறுபொச் சாப்பும்
கவடும் பொய்யுஞ் சுவடும் பெருஞ்சின
இகலுங் கொலையு மிழிப்புறு புன்மையும்
பகையு மச்சமுந் துணிவும் பனிப்பும்
முக்குண மடமையு மைம்பொறி மூயக்கமும்
இடும்பையும் பிணியு மிடுக்கிய வாக்கையை
உயிரெனுங் குருகுவிட் டோடுங் குடம்பையை
எலும்பொடு நரம்புகொண் டிடையிற் பிணித்துக்
கொழுந்தசை மேய்ந்து மொழுக்குவிழுங் § குடிலைச்
செழும்பெழு வுதிரச் சிறுபுழுக் குரம்பையை
மலவுடற் குடத்தைப் புலவுடற் புட்டிலைத்
தொலைவிலாச் சோற்றுத் துன்பக் குழியைக்
கொலைபடைக் கலம்பல கிடக்குங் கூட்டைச்
சலிப்புறு வினைப்பல சரக்குக் குப்பையைக்
கோட்சரக் கொழுகும் பீறற் கோணியைக்
கோபத்தீ மூட்டுங் கொல்லன் றுருத்தியை

---

* கடுவெண்ணெய் - விஷம்.

§ குடிலை - சரீரம்.



சிவசருமரும் அவர் மனைவியரும்
சிவபிரானாகிய குழந்தையைக் கண்டெடுத்தல்

* ஐம்புலப் பறவை யடையும்பஞ் சரத்தைப்
புலராக் கவலை விளைமரப் பொதும்பை
ஆசைக் கயிற்றி லாடும்பம் பரத்தைக்
காசிற் பணத்திற் சுழலுங்காற் றாடியை
மக்கள் வினையின் மயங்குந் திகிரியைக்
கடுவெளி யுருட்டிய சகடக் காலைப்
பாவச் சரக்கொடு பவக்கடல் புக்குக்
காமக் காற்றெடுத் தலைப்பக்
கெடுவழிக் கரைசேர் கொடுமரக் கலத்தை
இருவினை விலங்கொடு மியங்குபுற் கலனை
நடுவன்வந் தழைத்திட நடுங்கிடும் யாக்கையைப்
பிணமெனப் படுத்தியான் புறப்படும் பொழுதின்
அடிமலர்க் கமலத்துக் கபயமின் னடைக்கலம்
வெளியிடை யுருமிடி யிடித்தென வெறித்தெழுக்
கடுநடை வெள்விடைக் கடவுணின் னடைக்கலம்
இமையா நாட்டத் திறைவ யடைக்கலம்
அடியார்க் கெளியா யடைக்கல மடைக்கலம்
மறையவர் தில்லை மன்றுணின் றாடிக்
கருணைமொண் டலையெறி கடலே யடைக்கலம்
தேவரு முனிவருஞ் சென்றுநின் றேத்தப்
பாசிழைக் கொடியொடு பரிந்தருள் புரியும்
எம்பெரு மானின் னிணையடிக் கபயம்
அம்பலத் தரசே யடைக்கல முனக்கே.

## 4-வது கச்சித்திருவகவல்

திருமால் பயந்த திசைமுக னமைத்து
வருமேழ் பிறவியு மானுடத் துதித்து
மலைமகள் கோமான் மலரடி யிறைஞ்சிக்
குலவிய சிவபதங் குறுகா தவமே
மாதரை மகிழ்ந்து காதல்கொண் டாடும்
மானுடர்க் கெல்லாம் யானெடுத் துரைப்பேன்
விளிவெளி மாக்க டெளிவுறக் கேண்மின்
முள்ளுங் கல்லு முயன்று நடக்கும்

---

* ஐம்புலப்பறவை-உயிர்.

உள்ளங் காலைப் பஞ்சென வுரைத்தும்
வெள்ளெ லும் பாலே பேவிய கணைக்கால்
துள்ளும் வராலெனச் சொல்லித் துதித்தும்
தசையு மெலும்புந் தக்கபுன் * குறங்கை
இசையுங் கதலித் தண்டென வியம்பியும்
நெடுமுடை ரூங்கி நின்றிடு மிடையைத்
துடிபிடி யென்று சொல்லித் துதித்தும்
மலமுஞ் சலமும் வழும்புந் திரையும்
அலையும் வயிற்றை யாலிலை யென்றும்
சிலந்தி போலக் கிளைத்துமுன் னெழுந்து
திரண்டு விம்மிச் சிப்பாய்ந் தேறி
உகிராற் றேறவுலர்ந்துள் ளுருகி
நகுவார்க் கிடமாய் நான்று வற்றும்
முலையைப் பார்த்து † முளரிமொட் டென்றும்
குலையுங் காமக் குருடர்க் குரைப்பேன்
நீட்டவு முடக்கவு நெடும்பொருள் வாங்கவும்
ஊட்டவும் பிசையவு முதவிபின் கிபற்றும்
அங்கையைப் படர்த்துக் காந்தளென் றுரைத்தும்
வேர்வையு மழுக்கு மேவிய கழுத்தைப்
பாரினி லினிய கமுகெனப் பகர்ந்தும்
வெரிப்பு மூத்தையு மேவிய வாயைத்
துப்பு முருக்கின் றாய்மல ரென்றும்
அன்னமுங் கறியு மசைவிட் டிறக்கும்
முன்னிய பல்லை முத்தென மொழிந்தும்
நீருஞ் சளியு நின்றுநின் றொழுகும்
கூரிய மூக்கைக் குமிழெனக் கூறியும்
தண்ணீர் பீளை தவிரா தொழுகும்
கண்ணைப் பார்த்துக் கழுநீ ரென்றும்
உள்ளுங் குறும்பி யொழுகுங் காதை
வள்ளைத் தண்டின் வளமென வாழ்த்தியும்
கையு மெண்ணெயுங் கலவா தொழியில்
வெய்ய வதரும் பேனும் விளையத்

---

* குறங்கு-தொடை. † முளரி-தாமரை,

தக்க தலையோட் டின்மூளைத் தெழுந்த
சிக்கின் மயிரைத் திரண்முடி லென்றும்
சொற்பல பேசித் துதித்து நீங்கள்
நச்சிச் செல்லு நரக வாயில்
தோலு மிறைச்சியுந் துதைந்துசீப் பாயும்
காமப் பாழி கருவிளை கழனி
தூமைக் கடவழி தொலைபெறு வாயில்
எண்சா ணுடம்பு மிழியும் * பெருவழி
மண்பாற் காமங் கழிக்கு மறைவிடம்
நச்சிக் காமுக ருய்கா னென்றும்
இச்சித் திருக்கு மிடைகழி வாயில்
திங்கட் சடையோன் றிருவரு ளில்லார்
தங்கித் திரியுஞ் சவலைப் பெருவழி
புண்ணிது வென்று புடவையை மூடி
உண்ணீர் பாயு மோசைச் செழும்புண்
மால்கொண் டறியா மாந்தர் புகும்வழி
நோய்கொண் டொழியா நுண்ணியர் போம்வழி
தருக்கிய § காமுகர் சாரும் படுகுழி
செருக்கிய காமுகர் சேருஞ் சிறுகுழி
பெண்ணு மாணும் பிறக்கும் பெருவழி
மலஞ்சொரிந் திழியும் வாயிற் கருகே
சலஞ்சொரிந் திழியுந் தண்ணீர் வாயில்
இத்தை நீங்க ளினிதென வேண்டா
பச்சிலை யிடினும் பத்தர்க் கிரங்கி
மெச்சிச் சிவபத வீடருள் பவனை
முத்தி நாதனை மூவர் முதல்வனை
அண்டாண்டமு மனைத்துள புவனமும்
கண்ட வண்ணலைக் கச்சியிற் கடவுளை
ஏக நாதனை யிணையடி யிறைஞ்சுமின்
போக மாதரைப் போற்றுத லொழிந்தே.

---

* பெருவழி-யோனித்துவாரம்.

§ காமுகர்-இன்பத்தில் அதிக இச்சையுற்ற பேயர்.

## * திருவேகம்ப மாலை

கட்டளைக்கலித்துறை

அறந்தா னியற்று மவனிலுங் கோடி யதிகமில்லந்
துறந்தா னவனிற் சதகோடி யுள்ளத் துறவுடையோன்
மறந்தா னறக்கற் றறிவோ டிருந்திரு வாதனைபற் [னே.
றிறந்தான் பெருமையை யென்சொல்லு வேன்கச்சியேகம்ப

கட்டி யணைத்திடும் பெண்டிரு மக்களுங் காலதச்சன்
வெட்டி முறிக்கு மரம்போற் சரீரத்தை வீழ்த்திவிட்டாற்
கொட்டி முழக்கி யழுவார் மயானங் குறுகியப்பால்
எட்டி யடிவைப் பரோ விறை § வாகச்சி யேகம்பனே. 2

கைப்பிடி நாயகன் றாங்கையி லேயவன் கையையெடுத்
தப்புறந் தன்னி லசையாமன் முன்வைத் தயல்வளவில்
ஒப்புடன் சென்று துயினீத்துப் பின்வந் துறங்குவளை
எப்படி நானம்பு வேனிறை வாகச்சி யேகம்பனே. 3

நன்னாரிற் பூட்டிய சூத்திரப் பாவைநன் னார்தப்பினால்
தன்னாலு மாடிச் சலித்திடு மோவந்தத் தன்மையைப்போல்
உன்னாலி யானுந் திரிவதல் லான்மற் றுனைப்பிரிந்தால்
என்னாலிங் காவதுண் டோவிறை வாகச்சி யேகம்பனே. 4

நல்லா ரிணக்கமு நின்பூசை நேசமு ஞானமுமே
அல்லாது வேறு நிலையுள தோவக முப்பொருளும்
இல்லாளுஞ் சுற்றமு மைந்தரும் வாழ்வு மெழிலுடம்பும்
எல்லாம் வெளிமயக் கேயிறை வாகச்சி யேகம்பனே 5

---

* “திருவேகம்பமாலை” - அழகிய ஏகாம்பரநாதனைப் போற்றித் தொடுத்த பாமாலை.

§ இறைவா - விளிவேற்றுமை; சிவபெருமான்.

பொல்லா தவனெறி நில்லா தவனைம் புலன்கடமை
வெல்லாத வன்கல்வி கல்லாத வன்மெய் யடியவர்பாற்
செல்லா தவனுண்மை சொல்லா தவனின் திருவடிக்கன்
பில்லா தவன்மண்ணி லேன்பிறந் தேன்கச்சி யேகம்பனே.6

பிறக்கும் பொழுது கொடுவந்த தில்லைப் பிறந்து மண்மேல்
இறக்கும் பொழுது கொடுபோவ தில்லை யிடைநடுவிற்
குறிக்குமிச் செல்வஞ் சிவன்தந்த தென்று கொடுக்கறியா
திறக்குங்குலாமருக் கென்சொல்லு வேன்கச்சி யேகம்பனே.

அன்ன விசார மதுவே விசார மதுவொழிந்தால்
சொன்ன விசாரந் தொலையா விசாரநற் றோகையரைப்
பன்ன விசாரம் பலகால் விசாரமிப் பாவிநெஞ்சுக்
கென்னவி சாரம்வைத் தாயிறை வாகச்சி யேகம்பனே. 8

கல்லாப் பிழையுங் கருதாப் பிழையுங் கசிந்துருகி
நில்லாப் பிழையு நினையாப் பிழையுநின் *அஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையுந் துதியாப்பிழையுந் தொழாப்பிழையும்
எல்லாப்பிழையும் பொறுத்தருள் வாய்கச்சி யேகம்பனே. 9

மாயநட் போரையு மாயா மலமெனு மாதரையும்
வீயவிட் டோட்டி வெளியே புறப்பட்டு மெய்யருளாந்
தாயுடன் சென்றுபின் றாதையைக் கூட்டிப்பின் றாயைமறந்
தேயுமதே நிட்டையென்று னெழிற்கச்சி யேகம்பனே. 10

வரிக்கோல வேல்விழியா §ரநு ராக மயக்கிற்சென்று
சரிக்கோ துவேனெழுத் தஞ்சுஞ் சொலேன்றமியேனுடலம்
நரிக்கோ கழுகு பருந்தினுக் கோவெய்ய நாய்தனக்கோ
எரிக்கோ விரையெதுக் கோவிறை வாகச்சி யேகம்பனே.11

காதென் றுமூக்கென்று கண்ணென்றுகாட்டி பெண்கண்ணெ
மாதென்று சொல்லி வருமாயைதன்னை மறலிவிட்ட [திரோ

* அஞ்செழுத்தை-பஞ்சாக்கரத்தை. § அநுராகம்-இச்சை.

தூதேன் றெண்ணுமற் சுகமென்று நாடுமித் தூர்ப்புத்தியை
ஏதென் றெடுத்துரைப் பேனிறை வாகச்சி யேகம்பனே. 12

ஊருஞ் சதமல்ல வுற்றார் சதமல்ல வுற்றுப்பெற்ற
பேருஞ் சதமல்ல பெண்டீர் சதமல்ல பிள்ளைகளுஞ்
சீருஞ் சதமல்ல செல்வஞ் சதமல்ல தேசத்திலே
யாருஞ் சதமல்ல நின்றாள் சதங்கச்சி யேகம்பனே. 13

சீறும் வினையது பெண்ணுரு வாகித் திரண்டுருண்டு
கூறு முலையு மிறைச்சியு மாகிக் கொடுமையினாற்
பீறு மலமு முதிரமுஞ் சாயும் பெருங்குழிவிட்
டேறுங் கரைகண்டி லேனிறை வாகச்சி யேகம்பனே. 14

பொருளுடைபோரைச்செயலினும்வீரரைப்போர்க்களத்துந்
தெருளுடை யோரை முகத்தினுந் தேர்ந்து தெளிவதுபோல்
அருளுடை யோரைத் தவத்திற் குணத்தி லருளிலன்பில்
இருளறு சொல்லினுங் காணத் தகுங்கச்சி யேகம்பனே. 15

பருத்திப் பொதியினைப் போலே வயிறு பருக்கத்தங்கள்
துருத்திக் கறுசுவை போடுகின் றார்துறந் தோர்தமக்கு
வருத்தி யமுதிட மாட்டா ரவரையிம் மாநிலத்தில்
இருத்திக் கொண்டே னிருந்தாயிறை வாகச்சி யேகம்பனே.

பொல்லா விருளகற் றுங்கதிர் கூகைபென் புட்கண்ணினுக்
கல்லா யிருந்திடு மாறெக்கு மேயறி வோருளத்தில்
வல்லா ரறிவா ரறியார் தமக்கு மயக்கங்கண்டாய்
எல்லாம் விழிமயக் கேயிறை வாகச்சி யேகம்பனே. 17

வாதுக்குச்சண்டைக்குப்போவார்வருவார்வழக்குரைப்பார்
தீதுக் குதவியுஞ் செய்திடு வார்தினந் தேடியொன்று
மாதுக் களந்து மயக்கிடு வார்விதி வாளுமட்டும்
ஏதுக் கிவர்பிறந் தாரிறை வாகச்சி யேகம்பனே. 18

ஓயாமற்பொய்சொல்வர் நல்லோரைநிந்திப்ப ருற்றுப்பெற்ற
தாயாரை வைவர் * சதியா யிரஞ்செய்வர் சாத்திரங்கள்
ஆயார் பிறர்க்குப காரஞ்செய் யார்தமை யண்டினர்க்கொன்
றீயா ரிருந்தென்ன போயென்ன காண்கச்சி யேகம்பனே.

அப்பென்றும்வெண்மைய தாயினுமாங்கந் நிலத்தியல்பாய்த்
தப்பின்றி யேகுண வேற்றுமை தான்பல சார்தலினாற்
செப்பி § லபக்குவம் பக்குவ மாயுள்ள சீவனிலும்
இப்படி யேநிற்ப னெந்தை பிரான்கச்சி யேகம்பனே. 20

நாயாய்ப் பிறந்திடி னல்வேட்டை யாடி நயம்புரியுந்
தாயார் வயிற்றி னராய்ப் பிறந்துபின் சம்பன்னராய்க்
காயா மரமும் வறளாங் குளமுங்கல் லாவுமென்ன
ஈயா மனிதரை யேன்படைத் தாய்கச்சி யேகம்பனே. 21

ஆற்றிற் கரைத்த புளியாக் கிடாமலென் னன்பையெல்லாம்
போற்றித் திருவுளம் பற்றுமை யாபுர மூன்றெரித்துக்
கூற்றைப்பணிகொளுந் தாளுடையாய்குன்றவில்லுடையாய்
ஏற்றுக் கொடியுடை யாயிறை வாகச்சி யேகம்பனே. 22

பெண்ணாகிவந்தொரு மாயாபிசாசம் பிடித்திட்டென்னைக்
கண்ணால் வெருட்டி முலையான் மயக்கிக் ¶ கடி தடத்துப்
புண்ணாங்குழியிடைத் தள்ளியென்போதப் பொருள்பறிக்க
எண்ணா துனைமறந் தேனிறை வாகச்சி யேகம்பனே. 23


நாவார வேண்டும் விதஞ்சொல்லு வாருனை நான்பிரிந்தால்
சாவேனென் றேயிருந் தொக்க வுண்பார்கள் கைதான்வறண்
போய்வாருமென் றுநடுத்தலைக்கேகுட்டும்பூவையருக் [டால்
கேவார் தலைவிதி யோவிறை வாகச்சி யேகம்பனே. 24

கல்லார் சிவகதை நல்லோர் தமக்குக் கனவிலுமெய்
சொல்லார் பசித்தவர்க் கன்னங்கொ டார்குரு சொன்னபடி

---

* சதி - துன்பம், கொலை,

§ அபக்குவம்-பக்குவமல்லாமை, ¶ கடிதடம்-யோனி.



குழந்தையைப் பரிவர்த்தனை செய்து
பொன்கொளல்

நில்லா ரறத்தை நினையார்நின் னாம நினைவிற்சற்றும்
இல்லா ரிருந்தென் னிறந்தென் புகல்கச்சி யேகம்பனே. 25

வானமு தத்தின் சுவையறி யாதவர் வண்கனியின்
தானமு தத்தின் சுவையெண்ணல் போலத் தனித்தனியே
தேனமு தத்தின் தெளிவாய ஞானஞ் சிறிதுமில்லார்க்
கீனமு தச்சுவை நன்றல்ல வோகச்சி யேகம்பனே 26

ஊற்றைச் சரீரத்தை யாபாசக் கொட்டிலை யூன்பொதிந்த
பீற்றற் றுருத்தியைச் சோறிடுந் தோற்பையைப் பேசரிய
காற்றிற் பொதிந்த நிலையற்ற பாண்டத்தைக் காதல்செய்தே
ஏற்றுத் திரிந்துவிட் டேனிறை வாகச்சி யேகம்பனே. 27

சொல்லால்வருங்குற்றஞ் சிந்தனையால்வருந் தோடஞ்செய்த
பொல்லாத தீவினை பார்வையிற் பாவங்கள் புண்ணியநூல்
அல்லாத கேள்வியைக் கேட்டிடுந் தீங்குக ளாயவுமற்
றெல்லாப் பிழையும் பொறுத்தருள் வாய்கச்சி யேகம்பனே.

முட்டற்ற மஞ்சளை யெண்ணெயிற் கூட்டி முகமுனுக்கி
மெட்டிட்டுப் பொட்டிட்டுப் பித்தளையோலை விளக்கியிட்டுப்
பட்டப் பகலில் வெளிமயக் கேசெயும் பாவையர்மேல்
இட்டத்தை நீதவிர்ப் பாயிறை வாகச்சி யேகம்பனே. 29

பிறந்துமண் மீதிற் பிணியே குடிகொண்டு பேரின்பத்தை
மறந்துசிற் றின்பத்தின் மேன்மய லாகிப்புன் மாதருக்குட்
பறந்துழன் றேதடு மாறிப்பொன் றேடியப் பாவையர்க்கீந்
திறந்திட வோபணித் தாயிறை வாகச்சி யேகம்பனே. 30

* பூதங்க ளற்றுப் பொறியற்றுச் சாரம் புலன்களற்றுப்
பேதங் குணமற்றுப் பேராசை தானற்றுப் பின்முனற்றுக்
காதங் கரணங் களுமற்ற வானந்தக் காட்சியிலே
ஏதங் களைந்திருப் பேனிறை வாகச்சி யேகம்பனே. 31

---

* இப்பாடலே வேதாந்த முடிவை அறிவுறுத்துவது.

நல்லா யெனக்கு மனுவென்ற தந்தருண் ஞானமிலாப் [ஞ்
பொல்லாவெனைக்கொன்ற போடும்பொழுதியல் பூசைசெப
சொல்லார் நற்கோயி னியமம் பலவகைத் தோத்திரமும்
எல்லா முடிந்தபின் சொல்லுகண் டாய்கச்சி யேகம்பனே.

சடக்கடத் துக்கிரை தேடிப் பலவுயிர் தம்மைக்கொன்று
விடக்கடித் துக்கொண் டிறுமாந் திருந்து மிகமெலிந்து
படக்கடித் தின்றுழல் வார்க டமைக்கரம் பற்றிநமன்
இடக்கடிக் கும்பொழு தேதசெய் வார்கச்சி யேகம்பனே.

நாறு முடலை நரிப்பொதி சோற்றினை நான்றினமுஞ்
சோறுங் கறியு நிரப்பிய * பாண்டத்தைத் தோகையர்தங்
கூறு மலமு மிரத்தமுஞ் சேருங் குழியில்விழா
தேறும் படியருள் வாயிறை வாகச்சி யேகம்பனே. 34

சொக்கிட் டரமனைப் புக்குட் டிருடிய துட்டர்வந்து
திக்குற்ற மன்னரைக் கேட்பவ போற்சிவ நிந்தைசெய்து
மிக்குக் குருலிங்க சங்கம நிந்தித்து வீடிச்சிக்கு [னே.
மெக்குப் பெருத்தவர்க் கென்சொல்லு வேன்கச்சி யேகம்ப

விருந்தாக வந்தவர் தங்களுக் கன்ன மிகக்கொடுக்கப்
பொருந்தார் வளம்பெற வாழ்வார்நின் னமத்தைப் போற்றி
அருந்தா முலைபங்க ரென்னாரப் பாதக ரம்புவியில் [நித்தம்
இருந்தாவ தேதுகண் டாயிறை வாகச்சி யேகம்பனே. 36

எல்லா மறிந்து படித்தே யிருந்தெமக் குள்ளபடி
வல்லா னறிந்துள னென்றுண ராது மதிமயங்கிச்
சொல்லான் மலைந்துறு சூழ்விதி யின்படி துக்கித்துப்பின்
எல்லாஞ் சிவன்செய லேயென்பர் காண்கச்சி யேகம்பனே.

பொன்னை நினைந்து வெகுவாகத் தேடுவர் § பூவையன்னாள்
தன்னை நினைந்து வெகுவா யுருகுவர் தாரணியில்

* பாண்டம் - உடல், தேகம். § பூவை - இலக்ஷிமி.

உன்னை நினைந்திங் குனைப்பூசி யாத வுலுத்தரெல்லாம்
என்னை யிருந்துகண் டாயிறை வாகச்சி யேகம்பனே. 38

கடுஞ்சொல்லின்பம்வரை யினரைக்குண்டரைக்காமுகரைக்
கொடும்பவ மேசெயும் நிர்மூடர் தம்மைக் குவலயத்துள்
நெடும்பனை போல வளர்ந்துநல் லோர்த நெறியறியா
இடும்பரை யேன்வகுத் தாயிறை வாகச்சி யேகம்பனே. 39

கொன்றேனனேக முயிரையெல்லாம்பின்பு கொன்றுகொன்
தின்றே னதன்றியுந் தீங்குசெய் தேனது தீர்கவென்றே [று
நின்றேனின் சந்நிதிக் கேயத னாற்குற்ற நீபொறுப்பாய்
என்றே யுனைநம்பி னேனிறை வாகச்சி யேகம்பனே. 40

கட்டளைக்கலிப்பா

அன்னை யெத்தனை யெத்தனை வன்னையோ
அப்ப னெத்தனை யெத்தனை யப்பனோ
பின்னை யெத்தனை யெத்தனை பெண்டிரோ
பிள்ளை யெத்தனை யெத்தனை பிள்ளையோ
முன்னை யெத்தனை யெத்தனை சென்மமோ
மூட னாயடி யேனு மறிந்திலேன்
இன்ன மெத்தனை யெத்தனை சென்மமோ
என்செய் வேன்கச்சி யேகம்ப நாதனே.

## திருத்தில்லை

காம்பிணங்கும் * பணைத்தோ ளார்க்கும் பொன்னுக்குங் காசினுக்கும், தாம்பிணங் கும்பல வாசையும் விட்டுத் தனித்துச்செத்துப், போம்பிணந் தன்னைத் திரளாகக்கூடிப் புரண்டினிமேற், சாம்பிணங் கத்துதையோ வென்செய்வேன் தில்லை சங்கரனே. 1

சோறிடு நாடு துணிதருங் குப்பைதொண் டன்பரைக்கண்
டேறிடுங் கைக ளிறங்கிடுந் தீவினை யெப்பொழுது

* பணைத்தோள் - மூங்கிலடியை யொத்த தோள்.

நீறிடு மேனியர் சிற்றம் பலவர் றிருக்தங்கண்டால்
ஊறிடுங் கண்க ளுருகிடு நெஞ்சமென் னுள்ளமுமே. 2

அழலுக்குள் வெண்ணெயெனவே யுருகிப்பொன் னம்பலத்
திழலுக்கு னின்று தவமுனுற் றுமனிட் டேரமின்னுர் [தார்
குழலுக் கிசைந்த வகைமாலை கொண்டுகுற் றேவல்செய்து
விழலுக்கு முத்துலை யிட்டிறைத் தேனென் விதிவசமே. 3

ஓடாமற் பாழுக் குழையாம லோர முரைப்பவர்பாற்
கூடாம னல்லவர் கூட்டம் விடாமல்வெங் கோபநெஞ்சில்
நாடாம னன்மை வழுவாம லின்றைக்கு நாளைக்கென்று
தேடாமற் செல்வந் தருவாய் சிதம்பர தேசிகனே. 4

பாராம லேற்பவர்க் கில்லையென் ஞமற் பழுதுசொல்லி
வாராமற் பாவங்கள் வந்தணு காமன் மனமயர்ந்து
பேராமற் சேவை பிரியாம லன்பு பெருதவரைச்
சேராமற் செல்வந் தருவாய் சிதம்பர தேசிகனே. 5

கொல்லாமற்கொன்றதைத் தின்னுமற்குத்திரங் கோள்களவு
கல்லாமற் * கைதவ ரோடிணங் காமற் கனவினும்பொய்
சொல்லாமற் சொற்களைக் கேளாமற்றேகைபர் மாயையிலே
சல்லாமற் செல்வந் தருவாய் சிதம்பர தேசிகனே. 6

முடிசார்ந்த மன்னரு மற்றுமுள் ளோரு முடிவிலொரு
பிடிசாம்ப ராய்வெந்து மண்ணுவ துங்கண்டு பின்னுமிந்தப்
§ படிசார்ந்தவாழ்வை நினைப்பதல்லாற் பொன்னினம்பலவர்
அடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென்றேயறி றில்லையே. 7

காலை ¶ யுபாதி மலஞ்சல மாமன்றிக் கட்டு யிற்
சால வுபாதி பசிதாக மாமுற் சஞ்சிதமா
மாலை யுபாதி துயில்காம மாமிவை மாற்றி ட்டே
ஆலமு கந்தரு ளம்பல வாவென்னை யாண் ருளே. 8

* கைதவர்-வஞ்சகர், § படி-பூமி. ¶ உபாதி-துன்பம்.

ஆயும் புகழ்த்தில்லை யம்பல வாண ரருகிற்சென்றாற்
பாயு மிடபங் கடிக்கு மரவம்பின் பற்றிச்சென்றாற்
பேயுங் கணமும் பெருந்தலைப் பூதமும் பின்றொடரும்
போபென்செய் வாய்மன மேபிணக்காடவர் போமிடமே. 9

ஓடு மெடுத்தத ளாடையுஞ் சுற்றி யுலாவிமெள்ள
வீடுக டோறும் பலிவாங்கி யேவிதி யற்றவர்போல்
ஆடு மருட்கொண்டிங் கம்பலத் தேகிற்கு மாண்டிதன்னைத்
தேடுங் கணக்கென்ன காண்சிவ காம சவுந்தரியே. 10

ஊட்டுவிப்பானுமுறங்குவிப்பானுமிங்கொன்றொடொன்றை
மூட்டுவிப் பானு முயங்குவிப் பானு முயன்றவினை
காட்டுவிப் பானு மிருவினைப் பாசக் கயிற்றின்வழி
ஆட்டுவிப் பானு மொருவனுண் டேதில்லை யம்பலத்தே. 11

அடியார்க் கெளியவ ரம்பல வாண ரடிபணிந்தால்
மடியாமற் செல்வ வரம்பெற லாம்வைய மேழளந்த
நெடியோனும் வேதனுங் காணாத நித்த நிமலனருட்
குடிகாணு நாங்க ளவர்காணு மெங்கள் குலதெய்வமே. 12

தெய்வச் சிதம்பர தேவாவுன் சித்தந் திரும்பிவிட்டாற்
பொய்வைத்த சொப்பன மாமன்னர்வாழ்வும் புவியுமெங்கே
மெய்வைத்த செல்வமெங் கேமண்ட லீகர்தம் மேடையெங்
கைவைத்த நாடக சாலையெங் கேயிது கண்மயக்கே. [கே

உடுப்பானும்பாலன மூண்பானுமுய்வித் தொருவர்தம்மைக்
கெடுப்பானு மேதென்ற கேள்விசெய்வானுங் கெதியடங்கக்
கொடுப்பானுந்தேகிபென்றேற்பானு மேற்கக்கொடாமனின்
றடுப்பானு நீயல்லையோதில்லை யானந்தத்தாண்டவனே. [று

வித்தாரம் பேசினுஞ் சோங்கே றினும்கம்ப மீதிருந்து
தத்தாவென் றோதிப் *பவரிகொண் டாடினுந் தம்முன்றம்பி

* பவரி - ஊர்கோலம்.

ஓத்தாசை பேசினு மாவதுண் டோதில்லை யுண்ணிறைந்த
கத்தாவின் சொற்படி யல்லாது வேறில்லை கன்மங்களே. 15

பிறவா திருக்க வரம்பெறல் வேண்டும் பிறந்துவிட்டால்
இறவா திருக்க மருந்துண்டு காணிது வெப்படியோ
அறமார் புகழ்த்தில்லை யம்பல வாண ரடிக்கமல
மறவா திருமன மேயது காணன் மருந்துனக்கே. 16

தவியா திருநெஞ்ச மேதில்லை மேவிய சங்கரனைப்
புவியார்ந் திருக்கின்ற ஞான கரனைப் * புராந்தகனை [தால்
அவியா விளக்கைப்பொன் னம்பலத்தாடியை யைந்தெழுத்
செவியாம னீசெவித் தாற்பிற வாமுத்தி சித்திக்குமே. 17

காலின் மறைப்பொரு ளம்பல வாணரை நம்பியவர்
பாலி லொருதரஞ் சேவிக்கொ ணுதிருப் பார்க்கருங்கல்
மேலி லெடுத்தவர் கையிலங் கைத்தைப்பர் மீண்டுமொரு
காலி னிறுத்துவர் கிட்டியுந் தாம்வந்து கட்டுவரே. 18

ஆற்றோடு தும்பை யணிந்தாடு மம்பல வாணர்தமைப்
போற்று தவர்க்கடை யாளமுண் டேயிந்தப் பூதலத்தில்
சோற்றுவி யற்றுச் சுகமற்றுச் சுற்றத் துணியுமற்றே
ஏற்றாலும் பிச்சை கிடையாம லேக்கற் றிருப்பர்களே. 19

அத்தனை முப்பத்து மூக்கோடி தேவர்க் கதிபதியை
நித்தனை யம்மை சிவகாம சுந்தரி நேசனையெங்
கத்தனைப் பொன்னம் பலத்தாடு மையனைக் காணக்கண்கள்
எத்தனை கோடி யுகமோ தவஞ்செய் திருக்கின்றவே. 20

## திருச்செங்காடு

நெருப்பான மேனியர் செங்காட்டி லாத்தி நிழலருகே
இருப்பார் திருவுள மெப்படி யோவின்ன மென்னையன்னைக்

* புராந்தகன்-திரிபுர தகனஞ்செய்த பரமசிவன்.

கருப்பா சயக்குழிக் கேதள்ளு மோகன்னன் காணரிய
திருப்பாத மேதரு மோதெரி யாது சிவன்செயலே. 1

## திருவொற்றியூர்

* ஐயுந் தொடர்ந்து விழியுஞ் செருகி யறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற போதொன்று வேண்டுவன்
செய்யுந் திருவொற்றி யூருடையீர்திரு நீறுமிட்டுக் [யான்
கையுந் தொழப்பண்ணி யைந்தெழுத் தோதவுங் கற்பியுமே.

சுடப்படு வாரறி யார்புர மூன்றையுஞ் சுட்டபிரான்
திடப்படு மாமதிற் றென்னொற்றி யூரன் றெருப்பரப்பின்
நடப்பவர் பொற்பத நந்தலை மேற்பட நன்குருண்டு
கிடப்பது காண்மன மேவிதி யேட்டைக் கிழிப்பதுவே. 2

## திருவிடைமருதூர்


காடே திரிந்தென்ன காற்றே புசித்தென்ன கந்தைசுற்றி
ஓடே யெடுத்தென்ன வுள்ளன்பி லாதவ ரோங்கிவிண்ணோர்
நாடே யிடைமரு தீசர்க்கு மெய்யன்பர் § நாரியர்பால்
வீடே யிருப்பினு மெய்ஞ்ஞான வீட்டின்ப மேவுவரே. 1

தாயும் பகைகொண்ட பெண்டீர் பெரும்பகை தன்னுடைய
சேயும் பகையுற வோரும் பகையிச் செகமும்பகை
ஆயும் பொழுதி லருஞ்செல்வ நீங்கிலிங் காதலினாற்
றோயுநெஞ் சேமரு தீசர்பொற் பாதஞ் சுதந்திரமே. 2

## திருக்கழுக்குன்றம்

காடோ செடியோ கடற்புற மோகன மேமிகுந்த
நாடோ நகரோ நகர்நடு வோநல மேமிகுந்த
வீடோ புறந்திண்ணை யோதமி யேனுடல் வீழுமிட
நீடோய் கழுக்குன்றி லீசா வுயிர்த்துணை நின்பதமே. 1

* ஐ-கோழை. § நாரியர்பால்-பெண்களிடம்; இல்லறம்.



ஓலையைக் கண்ட சுவேதாரணியர்
உண்மைநிலை அறிதல்

## திருக்காளத்தி

பத்தும் புகுந்து பிறந்து வளர்ந்து பட்டாடைசுற்றி
முத்தும் பவளமும் பூண்டோடி யாடி முடிந்தபின்பு
செத்துக் கிடக்கும் பிணத்தரு கேயினிச் சாம்பிணங்கள்
கத்துங் கணக்கென்ன காண்கயி லாபுரிக் காளத்தியே. 1

பொன்னாற் பிரயோசனம் பொன்படைத் தாற்குண்டு
பொன்படைத்தோன், தன்னாற் பிரயோசனம் பொன்னுக்
கங்கே துண்டத்தன்மையைப்போல், உன்னாற்பிரயோசனம்
வேணதெல்லாமுண் டுனைப்பணியும், என்னாற் பிரயோசன
மேதுண்டு காளத்தி யீசுரனே. 2

வாளான் மகவரிந் தூட்டவல்லே னல்லன் மாதுசொன்ன
சூளா லிளமை துறக்கவல் லேனல்லன் றொண்டுசெய்து
நாளாறிற் கண்ணிடந் தப்பவல் லேனல்ல னினிச்சென்
றாளாவ தெப்படி யோதிருக் காளத்தி யப்பருக்கே. 3

முப்போது மன்னம் புசிக்கவுந் தூங்கவு மோகத்தினாற்
செப்போ தினமுலை யாருடன் சேரவுஞ் சிவன்விடும்
அப்போது கண்கலக் கப்பட வும்மமைத் தாயையனே
எப்போது காணவல் லேன்றிருக் காளத்தி யீசுரனே. 4

இரைக்கே யிரவும் பகலுந் திரிந்திங் கிளைத்து மின்னார்
அரைக்கே யவலக் குழியரு கேபசும் பார்ந்தொருகும்
* புரைக்கே யுழலுந் தமியேனை யாண்டருள் பொன்முகலிக்
கரைக்கேகல் லால நிழற்கீ ழமர்ந்தருள் காளத்தியே. 5

நாறுங் குருதிச் சலதாரை தோற்புரை நாடொறுஞ்சிய்
ஊறு மலக்குழி காமத் துவார மொளித்திடும்புண்
தேறுந் தசைபிளப் பந்தரங் கத்தள சிற்றின்பம்விட்
டேறும் பதந்தரு வாய்திருக் காளத்தி யீசுரனே. 6

---

* புரை-குற்றம், யோனி.

## * திருக்கைலாயம்

கான்சாயும் வெள்ளி மலைக்கர சேநின் கழனம்பினேன்
ஊன்சாயுஞ் சென்ம மொழித்திடு வாய்கர வூரனுக்கா
மான்சாயச் செங்கை மழுவலஞ் சாய வளைந்தகொன்றைத்
தேன்சாய நல்ல திருமேனி சாய்த்த சிவக்கொழுந்தே. 1

இல்லந் துறந்து பசிவந்த போதங் கிரந்துதின்று
பல்லுங் கறையற்று வெள்வாயு மாயொன்றிற் பற்றுமின்றிச்
சொல்லும் பொருளு மிழந்து சுகானந்தத் தூக்கத்திலே
அல்லும் பகலு மிருப்பதென் றோகயி லாயத்தனே. 2

சினந்தனை யற்றுப் பிரியமுந் தானற்றுச் செய்கையற்று
நினைந்தது மற்று நினையா மையுமற்று நிர்ச்சிந்தனாய்த்
தனந்தனி யேயிருந் தானந்த நித்திரை தங்குகின்ற
வனந்தனி லென்றிருப் பேனத்த னேகயி லாயத்தனே. 3

கையார வேற்றுநின் றங்கணந் தின்று கரித்துணியைத்
தையா துடுத்துநின் சன்னிதிக் கேவந்து சந்ததமு
மெய்யார நிற்பனிந் துள்ளே யுரோமம் விதிர்விதிர்ப்ப
ஐயாவென் றோல மிடுவ தென்றோகயி லாயத்தனே. 4

நீரூர்த்த மேனி யுரோமஞ் சிலிர்த்துள நெக்குநெக்குச்
சேருய்க் கசிந்து கசிந்தே யுருகிநின் சீரடிக்கே
மாறாத் தியானமுற் றூனந்த மேற்கொண்டு மார்பிற்கண்ணீர்
ஆறாய்ப் பெருகக் கிடப்பதென் றோகயி லாயத்தனே. 5

செல்வரைப் பின்சென்று சங்கடம் பேசித் தினந்தினமும்
பல்லினைக் காட்டிப் பரிதவி யாமற் பரானந்தத்தின்
எல்லையிற் புக்கிட வேகாந்த மாயெனக் காமிடத்தே
அல்லலற் றென்றிருப் பேனத்த னேகயி லாயத்தனே. 6

---

* திருக்கைலாயம்-பரமனிடம் ஆன்மாக்கள் இறுதியில் குடிபுகும் வீடு.

* மந்திக் குருளைபொத் தேனில்லை நாயேன் வழக்கறிந்துஞ்
சிந்திக்குஞ் சிந்தையை யானென்செய் வேனெனைத் தீதகற்
புந்திப் பரிவிற் குருளையை யேந்திய பூசையைப்போல் [றிப்
எந்தைக் குரியவன் காணத் தனேகபி லாயத்தனே. 7

வருந்தேன் பிறந்து மிறந்து மயக்கும் புலன்வழி போய்ப்
பொருந்தே னரகிற் புகுகின்றி லேன்புகழ் வாரிடத்தில்
இருந்தே னினியவர் கூட்டம் விடேனிய லஞ்செழுத்தாம்
அருந்தே னருந்துவ னின்னரு ளாற்கபி லாயத்தனே. 8

## † மதுரை

விடப்படு மோவிப் பிரபஞ்ச வாழ்க்கையை விட்டுமனந்
திடப்படு மோநின் னருளின்றி யேதின மேயலையக்
கடப்படு மோவற்பர் வாயிற் சென்றுகண் ணீர்ததும்பிப்
படப்படு மோசொக்க நாதா சவுந்தர பாண்டியனே. 1

## பொது

உடைகோ வணமுண் டுறங்கப் புறந்திண்ணை யுண்டுணவிங்
கடைகா யிலையுண் டருந்தத்தண் ணீருண் டருந்துணைக்கே
விடையேறுமீசர் திருநாமமுண்டிந்த மேதினியில் [றைக்கே
வடகோ டுயர்ந்தென்ன தென்கோடு சாய்ந்தென்ன வான்பி

வீடு நமக்குத் திருவாலங் காடு விமலர்தந்த
ஓடு நமக்குண்டு வற்றாத பாத்திர மோங்குசெல்வ
நாடு நமக்குண்டு கேட்டதெல் லாந்தர நஞ்னெஞ்சமே
ஈடு நமக்குச் சொலவோ பொருவரு மிங்கில்லையே. 2

நாடிக்கொண் டீசரை நாட்டமுற் றியிலை நாதரடி
தேடிக்கொண் டாடித் தெளிந்தா யிலைசெக மாயைவந்து

---

* மந்தி - பெண் குரங்கு. † மதுரை - திருவிளையாடற் புராணத்திற் கூறியபடி காரணப்பெயர்.

மூடிக்கொண் டோமென்றுங் காமாயுதங்கண் முனிந்தவென்
பீடிப்பையேநெஞ்சமேயுனைப் போலில்லை பித்தர்களே. [றும்

கையொன்றுசெய்ய விழியொன்றுநாடக்கருத்தொன்றெண்
பொய்யொன்றுவஞ்சகநாவொன்றுபேசப்புலால்கமழு[ணப்
மெய்யொன்று சாரச் செவியொன்றுகேட்க விரும்புமியான்
செய்கின்றபூசையெவ் வாறுகொள் வாய்வினை தீர்த்தவனே.

கண்ணுண்டு காணக் கருத்துண்டு நோக்கக் கசிந்துருகிப்
பண்ணுண்டு பாடச் செவியுண்டு கேட்கப்பல் பச்சிலையால்
எண்ணுண்டு சாத்த வெதிர்நிற்க வீச னிருக்கையிலே
மண்ணுண்டு போகு தையோ கெடுவீரிந்த மானிடமே. 5

சொல்லினுஞ் சொல்லின் முடிவிலும் வேதச் * சுருதியிலும்
அல்லினு மாசற்ற வாதாயங் தன்னிலு மாய்ந்துவிட்டோர்
இல்லினு மன்ப ரிடத்திலு மீச னிருக்குமிடங்
கல்லினுஞ் செம்பிலு மோவிருப் பானெங்கள் கண்ணுதலே.

வினைப்போக மேயொரு தேகங்கண் டாய்வினை தானொழிந்
நினைப்போ தளவுநில் லாதுகண் டாய்சிவன்பாதநினை [தால்
நினைப்போரை மேவு நினையாரை நீங்கிந் நெறியினின்றால்
உனைப்போ லொருவருண் டோமன மேயெனக் குற்றவரே.

பட்டைக் கிழித்துப் பருவூசி தன்னைப் பரிந்தெடுத்து [துக்
முட்டச் சுருட்டியென் மொய்குழலாள்கையில் முன்கொடுத்
கட்டி யிருந்த கனமாயக் காரிதன் காமமெல்லாம்
விட்டுப் பிரியவென் றோவிங்ங னேசிவன் மீண்டதுவே. 8

சூதற்ற கொங்கையு மானார் கலவியுஞ் சூழ்பொருளும்
போதற்ற பூசலுக் கென்செய லாஞ்செய்த புண்ணியத்தால்
தீதற்ற மன்னவன் சிந்தையி னின்று தெளிவதற்கோ
காதற்ற வூசியைத் தந்துவிட் டானென்றன் கைதனிலே. 9

* சுருதி - வேதம்.

வாதற்ற திண்புய ரண்ணாமலையர் மலர்ப் பதத்தைப்
போதற்றெப் போதும் புகலுநெஞ் சேயிந்தப் பூதலத்தில்
தீதற்ற செல்வமென் தேடிப் புதைத்த திரவியமென்
காதற்ற வூசியும் வாராது காணுங் கடைவழிக்கே. 10

வேதத்தினுட்பொருண் மண்ணாசைமங்கையை விட்டுவிடப்
போதித்தவன்மொழி கேட்டிலையோசெய்த புண்ணியத்தால்
* ஆதித்தன் சந்திரன் போலே வெளிச்சம் தாம்பொழுது
காதற்ற வூசியும் வாராது காணுங் கடைவழிக்கே. 11

மனையாளு மக்களும் வாழ்வும் தனமுந்தன் வாயின்மட்டே
இனமான சுற்ற மயானமட் டேவழிக் கேதுதுணை
தினையா மளவெள் ளளவா கினுமுன்பு செய்ததவந்
தனையாளவென்றும் பரலோகஞ் சித்திக்குஞ் சத்தியமே. 12

அத்தமும் வாழ்வு மகத்துமட் டேவிழி யம்பொழுக
மெத்திய மாதரும் வீதிமட் டேவிம்மி விம்மியிரு
கைத்தல மேல்வைத் தழுமைந் தருஞ்சுடு காடுமட்டே
பற்றித் தொடரு மிருவினைப் புண்ணிய பாவமுமே. 13

சீயுங் குருதிச் செழுநீர் வழும்புஞ் செறிந்தெழுந்து
பாயும் புடவையொன் றில்லாத போது பகலிரவாய்
ஈயு மெறும்பும் புகுகின்ற யோனிக் கிரவுபகன்
மாயு மனிதரை மாயாமல் வைக்க மருந்தில்லையே. 14

சீதப் பனிக்குண்டு சிக்கெனக் கந்தை தினம்பசித்தால்
நீதுய்க்கச் சோறு மனைதோறு முண்டு நினைவெழுந்தால்
வீதிக்கு ணல்ல விலைமாத ருண்டிந்த மேதினியில்
ஏதுக்கு நீசலித் தாய்மன மேயென்றும் புண்படவே. 15

ஆறுண்டு தோப்புண் டணிவீதி யம்பலந் தானுமுண்டு
நீறுண்டு கந்தை நெடுங்கோவணமுண்டு நித்தநித்த

---

* ஆதித்தன் - சூரியன்.

மாறுண் டுலாவி மயங்குநெஞ் சேமனை தோறுஞ்சென்று
சோறுண்டு தூங்கிப்பின் சும்மா விருக்கச் சுகமுமுண்டே.

உடுக்கக் கவிக்கக் குளிர்காற்று வெய்யி லொடுங்கிவந்தால்
தடுக்கப் பழைய வொருவேட்டி யுண்டு சகமுழுதும்
படுக்கப் புறந்திண்ணை யெங்கெங்கு முண்டு பசித்துவந்தால்
கொடுக்கச் சிவனுண்டு நெஞ்சே நமக்குக் குறைவில்லையே.

மாடுண்டு கன்றுண்டு மக்களுண் டென்று மகிழ்வதெல்லாங்
கேடுண் டெனும்படி கேட்டுவிட் டோமினிக் கேண்மனமே
ஓடுண்டு கந்தையுண் டுள்ளே யெழுத்தைந்து மோதவுண்டு
* தோடுண்டகண்ட னடியார் நமக்குத் துணையுமுண்டே. 18

மாத்தா னவத்தையு மாயா புரியின் மயக்கத்தையும்
நீத்தார் தமக்கொரு நிட்டையுண் டோ நித்த னன்புகொண்டு
வேர்த்தாற் குளித்துப் பசித்தாற் புசித்து விழிதுயின்று
பார்த்தா லுலகத் தவர்போ லிருப்பர்பற் றற்றவரே. 19

ஒன்றென் றிருதெய்வமுண் டென் றிரு வுயர்செல்வமெல்லாம்
அன்றென் றிருபசித் தோர்முகம் பார்வல் லறமுநட்பும்
நன்றென் றிருநடு நீங்காம லேநமக் கிட்டபடி
என்றென் றிருமன மேயுனக் கேவுப தேசமிதே. 20

நாட்டமென் றேயிரு சற்குரு பாதத்தை நம்புபொம்மல்
ஆட்டமென் றேயிரு பொல்லா வுடலை யடர்ந்தசந்தைக்
கூட்டமென் றேயிரு § சுற்றத்தை வாழ்வைக் குடங்கவிழ்நீர்
ஓட்டமென் றேயிரு நெஞ்சே யுனக்குப தேசமிதே. 21

என்செய லாவ தியாதொன்று மில்லை யினித்தெய்வமே
உன்செய லேயென் றுணரப்பெற் றேனிந்த வூனெடுத்த
பின்செய்த தீவினை யாதொன்று மில்லைப் பிறப்பதற்கு
முன்செய்த தீவினை யோவிங்ங னேவந்து மூண்டதுவே. 22

---

* தோடு - காதணி.

§ சுற்றம்-பந்து; சுற்றியிருந்து காப்போர், காரணப்பெயர்.

திருவேட மாகித் தெருவிற் பயின்றெனைத் தேடிவந்து
பரிவாகப் பிச்சை பகருமென் னுனைப் பதம்பணிந்தேன்
கருவாகு மேதக் கடற்கரை மேவக் கருதுமென்னை
உருவாக்கிக் கொள்ளவல் லோவிங்க னேசிவ னுற்றதுவே.

விட்டே னுலகம் விரும்பே னிருவினை வீணருடன்
கிட்டே னவருரை கேட்டு மிரேன்மெய் கெடாதநிலை[க்கும்
தொட்டேன் * சுகதுக்கமற்றுவிட்டேன் றொல்லைநான்மறை
எட்டே னெனும்பர மென்னிடத் தேவந்திங்கெய்தியதே. 24

அட்டாங்க யோகமு மாதார மாறு மவத்தைகளைந்தும்
விட்டேறிப்போன வெளிதனிலேவியப் பொன்றுகண்டேன்
வட்டாகிச் செம்மதிப் பாலூற லுண்டு மகிழ்ந்திருக்க
எட்டாத பேரின்ப மென்னை விழுங்கி யிருக்கின்றதே. 25


எரியெனக்கென்னும் புழுவோவெனக்கெனுமிந்தமண்ணுஞ்
சரியெனக் கென்னும் பருந்தோ வெனக்கெனுந் தான்புசிக்க
நரியெனக் கென்னும்புன் னுயெனக் கென்னுமிந் நாறுடலைப்
பிரிய முடன்வளர்த் தேனித னாலென்ன பேறெனக்கே. 26

அண்ணறன் வீதி யரசிருப் பாரு மணிபடைபோர்
கண்ணொரு நாலொன்ப தாமவ ரேவலு நண்ணுமிவ்வூர்
துண்ணென் பசிக்கு படைப்பள்ளி யான சுகமுமெல்லாம்
எண்ணிலி கால மவமே விடுத்தன மெண்ணரிதே. 27

என்பெற்றதாயரு மென்னைப் பிணமென் றிகழ்ந்துவிட்டார்
பொன்பெற்றமாதரும்போவென் றுசொல்லிபுலம்பிவிட்டார்
கொன்பெற்ற மைந்தரும் பின்வலம் வந்து குடமுடைத்தார்
உன்பற் றொழிய வொருபற்று மில்லை யுடையவனே. 28

கரையற்ற பல்லுங் கரித்துணி யாடையுங் கள்ளமின்றிப்
பொறையுற்றநெஞ்சமும் பொல்லாதவூணும்புறந்திண்ணையுங்

* சுக துக்கம்-இன்ப துன்பம்.



பத்திரகிரியாரின் ஆணைகொண்ட
சேவகர் அடிகளைத் தலையிட்டுக்கொண்டேகல்

தரையிற் கிடப்பு மிரந்துண்ணு மோடுஞ் சகமறியக்
குறைவற்ற செல்வமென் றேகோலமாமறை கூப்பிடுமே. 29

எட்டுக் திசையும் பதினாறு கோணமு மெங்குமொன்றாய்
முட்டித் ததும்பி முளைத்தோங்கு சோதியை மூடரெல்லாங்
கட்டிச் சுருட்டித்தங் * கக்கத்தில்வைப்பர் கருத்தில்வையார்
பட்டப் பகலை யிரவென்று கூறிடும் பாதகரே. 30

வாய்நாறு மூழன் மயிர்ச்சிக்கு நாறிடு மையிடுங்கண்
பீநாறு மங்கம் பிணவெடி நாறும் பெருங்குழிவாய்ச்
சீநாறும் போனி யழனாறு மிந்தியச் சேறுசிந்திப்
பாய்நாறு மங்கையர்க் கோவிங் ஙனேமனம் பற்றியதே. 31

உரைக்கைக்கு நல்ல திருவெழுத் தைந்துண் டுரைப்படியே
செருக்கித் தரிக்கத் திருநீறு முண்டு தெருக்குப்பையில்
தரிக்கக் கரித்துணி யாடையுமுண் டெந்தச் சாதியிலும்[யே.
இரக்கத் துணிந்துகொண் டேன்குறை யேதுமெனக் கில்லை

ஏதப்பட் டாயினி மேற்படும் பாட்டை யீதென் றறிந்து
போதப்பட் டாயில்லை நல்லோ ரிடஞ்சென்று புல்லறிவால்
வாதைபபட் டாய்மட மானார் கலவி மயக்கத்திலே
பேதைப்பட் டாய்நெஞ்ச மேயுனைப்போலில்லை பித்தருமே.

சுரப்பற்று வல்வினை சுற்றமு மற்றுத் தொழில்களற்றுக்
கரப்பற்று மங்கையர் கையிணக் கற்றுக் கவலையற்று
வரப்பற்று நாதனை வாயார வாழ்த்தி மனமடங்கப்
பரப்பற் றிருப்பதன் றோபர மாபர மானந்தமே. 34

பேய்போற் றிரிந்து பிணம்போற் கிடந்திட்ட பிச்சையெல்லா
நாய்போ லருந்தி நரிபோ லுழன்றுநன் மங்கையரைத் [ம்
தாய்போற் கருதித் தமர்போல வனைவர்க்குந் தாழ்மைசொல்லிச்
§ சேய்போ லிருப்பர்கண் டீருண்மை ஞானந் தெளிந்தவரே.

* கக்கம்-அக்குள். § சேய்-குழந்தை; முருகப்பிரான்.

விடக்கே பருந்தின் விருந்தே கமண்டல வீணனிட்ட
முடக்கே புழுவந் துறையிட மேநல முற்றுமிலாச்
சடக்கே கருவி தளர்ந்துவிட் டாற்பெற்ற தாயுந்தொடாத்
தொடக்கே யுனைச்சுமந் தேனின்னி னேது சுகமெனக்கே.

அழுதாற் பயனென்ன நொந்தாற் பயனென்ன வாவதில்லை
தொழுதாற் பயனென்ன நின்னை யொருவர் சுடவுரைத்த
பழுதாற் பயனென்ன நன்மையுந் தீமையும் பங்கயத்தோன்
எழுதாப் படிவரு மோசலி யாதிரென் னேழைநெஞ்சே. 37

ஊரீ ருமக்கோ ருபதேசங் கேளு முடம்படங்கப்
போரீர் சமணைக் கழுவேற்று நீற்றைப் புறந்திண்ணையிற்
சாரீ ரனந்தலைச் சுற்றத்தை நீங்கிச் சகநகைக்க
வேரீ ருமக்கவர் தாமே தருவ ரிணையடியே. 38

நீற்றைப் புனைந்தென்ன நீராடப் போயென்ன நீமனமே
மாற்றிப் பிறக்க வகையறிந் தாயில்லை மாமறைநூல்
ஏற்றிக் கிடக்கு மெழுகோடி மந்திர மென்னகண்டாய்
ஆற்றிற் கிடந்துந் துறையறி யாம லலைகின்றதே. 39

செல்வரைப் பின்சென் றுபசாரம் பேசித் தினந்தினமும்
பல்லினைக் காட்டிப் பரிதவி யாமற் பரானந்தத்தின்
எல்லையிற் புக்குநல் லேகாந்த மாயெனக் காமிடத்தே
அல்லலற் றென்றிருப் பேனுல நீழ லரும்பொருளே. 40

* ஓங்கார மாய்நின்ற வத்துவி லேயொரு வித்துவந்து
பாங்காய் முளைத்த பயனறிந் தாற்பதி னாலுலகு
நீங்காம னீங்கி நிறையா நிறைந்து நிறையுருவாய்
ஆங்கார மானவர்க் கெட்டாக் கனிவந் தமர்ந்திடுமே. 41

விதியார் படைப்பு மறியா ரளிப்பும் வியன்கயிலைப்
பதியார் துடைப்புநம் பாலணு காது பரானந்தமே

---

* ஓங்காரம் - பிரணவம்.

கதியாகக் கொண்டுமற் றெல்லாந் துயிலிற் கனவெனவே
மதியா திருமன மேயிது காணன் மருந்துனக்கே. 42

நாய்க்குண்டு தெண்டு நமக்குண்டு பிச்சை நமனைவெல்ல
வாய்க்குண்டு மந்திர பஞ்சாட் சரமதி யாமல்வரும்
பேய்க்குண்டு நீறு திகைப்புண்டு நின்ற பிறவிப்பிணி [கே.
நோய்க்குண்டு * தேசிகன்றன் னருணோக்கங்க ணோக்குதற்

நேமங்க ணிட்டைகள் வேதங்க ளாகம நீதிநெறி
ஓமங்க டர்ப்பணஞ் சந்தி செபமந்த்ர யோகநிலை
நாமங்கள் சந்தனம் வெண்ணீறு பூசி நலமுடனே
சாமங்க டோறு மிவர்செய்யும் பூசைகள் § சர்ப்பனையே. 44

நானெத்தனை புத்தி சொன்னாலுங் கேட்டிலை நன்னெஞ்சமே
ஏனிப் படிக்கெட் டுழலுகின் றாயினி யேதுமிலா
வானத்தின் மீனுக்கு வன்றாண்டி யிட்ட வகையதுபோல்
போனத்தை மீள நினைக்கின் றனையென்ன புத்தியிதே. 45

அஞ்சக் கரமெனுங் கோடாலி கொண்டிந்த வைம்புலனும்
வஞ்சப் புலக்கட்டை வேரற வெட்டி வளங்கள்செய்து
விஞ்சத் திருத்திச் சதாசிவ மென்கின்ற வித்தையிட்டுப்
புஞ்சக் களைபறித் தேன்வளர்த்தேன் சிவபோகத்தையே. 46

தாயாருஞ்சுற்றமும் பெண்டிருங் கைவிட்டுத் தாழ்ந்திடுநாள்
நீயாரு நானு ரெனப்பகர் வாரந்த நேரத்திலே
நோயாரும் வந்து குடிகொள்வ ரேகொண்ட நோயுமொரு
பாயாரு நீயுமல் லாற்பின்னை யேதுநட் பாமுடலே. 47

ஆயும் பொழுது மயிர்க்கால்க டோறு மருங்கிருமி
தோயு மலக்குட்டை யாகிய காயத்தைச் சுட்டுவிட்டால்
பேயு நடன மிடுங்கட மாமென்று பேசுவதை
நீயு மறிந்திலை யோபொரு டேட நினைந்தனையே. 48

---

* தேசிகன்-குரு § சர்ப்பனை-வீண்,

பூணும் பணிக்கல்ல பொன்னுக்குத் தானல்ல பூமிதனைக்
காணும் படிக்கல்ல மங்கையர்க் கல்லகற் காட்சிக்கல்ல
சேணுங் கடந்த சிவனடிக் கல்லவென் சிந்தைகெட்டுச்
சாணும் வளர்க்க வடியேன் படுந்துயர் சற்றல்லவே. 49

வெட்டாத சக்கரம் * பேசாத மந்திரம் வேறொருவர்க்
கெட்டாத புட்ப மிறையாத தீர்த்த மினிமுடிந்து
கட்டாத லிங்கங் கருதாத நெஞ்சங் கருத்தினுள்ளே
முட்டாத பூசையன் றேகுரு நாதன் மொழிந்ததுவே. 50

எருமுட்டை பிட்கி னுதிர்ந்திடுஞ் செல்லுக் கெவாழுவார்
§ கருமுட்டை புக்குக் கழலகன் றுய்கன துக்கமதாய்ப்
பெருமுட்டுப் பட்டவர் போலவும் பேதையிர் பேத்துகிறீர்
ஒருமுட்டும் வீட்டு மரணம மென்றைக்கு மோதுமினே. 51

மையாடு கண்ணியு மைந்தரும் வாழ்வு மனையுஞ்செந்தீ
ஐயாநின் மாயை யுருவெளித் தோற்ற மகிலத்துள்ளே
மெய்யா யிருந்தது நாட்செல நாட்செல வெட்டவெறும்
பொய்யாய்ப்பழங்கதையாய்க்களவாய்மெல்லப்போனதுவே

ஆயாப் பலகலை யாய்ந்திடுந் தூய வருந்தவர்பாற்
போயா கிலுமுண்மை யைத்தெரிந் தாயில்லை பூதலத்தில்
வேயார்ந்த தோளியர் காம விகாரத்தில் வீழ்ந்தழுந்திப்
பேயாய் விழிக்கின் றனைமன மேயென்ன பித்துனக்கே. 53

அடியா ருறவு மரன்பூசை நேசமு மன்புமன்றிப்
படிமீதில் வேறு பயனுள தோ ¶ பங் கயன்வகுத்த
குடியான சுற்றமுந் தாரமும் வாழ்வுங் குயக்கலங்கள்
தடியா லடியுண்ட வாறொக்கு மென்றினஞ் சார்ந்திலரே. 54

ஆங்காரப் பொக்கிசங் கோபக் களஞ்சிய மாணவந்தான்
நீங்கா வரண்மனை பொய்வைத்த கூடம்வின் னீடிவளர்

---

* பேசாதமந்திரம்-ஓங்காரம். § கருமுட்டை-கருவாகிய முட்டை. ¶ பங்கயன்-காரணப்பெயர்; பிரமன்.

தேங்கார் பெருமதிற் காம விலாசமித் தேகங்கந்தல்
பாங்கா யுனைப்பணிந் தெப்படி ஞானம் பலிப்பதுவே. 55

ஒழியாப் பிறவி யெடுத்தேங்கி யேங்கி யுழன்றநெஞ்சே
அழியாப் பதவிக் கவுடதங் கேட்டி யநாதியனை
மழுமான் கரத்தனை மால்விடை யானை மனத்திலுன்னி
விழியாற் புனல்சிந்தி விம்மி யழுநன்மை வேண்டுமென்றே.

நாய்க்கொரு சூலு மதற்கோர் மருத்துவ நாட்டிலுண்டோ
பேய்க்கொரு ஞானம் பிடிபடு மோபெருங் காஞ்சிரங்காய்
ஆக்குவ ரார தருந்துவ ராரது போலுடம்பு
தீக்கிரை யாவதல் லாலேதுக் காமிதைச் செப்புமினே. 57

கச்சிற் கிடக்குங் கனதனத் திற்கடைக் கண்கள்பட்டே
இச்சித் திருக்கின்ற வேழைநெஞ் சேயிம வான்பயந்த
பச்சைப் பசுங்கொடி யுண்ணா முலைபங்கர் பாதத்திலே
தைச்சுக் கிடமன மேயொரு காலுந் தவறில்லையே. 58

மானார் விழியைக் கடந்தேறி வந்தனன் வாழ்குருவுங்
கோனாகியென்னைக் குடியேற்றிக்கொண்டனன்குற்றமில்லை
போனாலும் பேறிருந் தாலுநற் பேறிது பொய்யன்றுகாண்
ஆனாலு மிந்த வுடம்போ டிருப்ப தருவருப்பே. 59

சற்றாகி லுந்தனைத் தானறி யாய்தனை யாய்ந்தவரை
உற்றா கிலுமுரைக் கப்பொருந் தாயுனக் காணமிலை
பற்றாய்க்குருவைப்பணியாய் * பரத்தையர்பா லிற்சென்றென்
பெற்றாய் மடநெஞ்ச மேயுனைப் போலில்லை பித்தனுமே. 60

உளியிட்ட கல்லையு மொப்பிட்ட சாந்தையு மூற்றையறப்
புளியிட்டசெம்பையும் போற்றுகிலேனுயர்பொன்னெனவே
ஒளியிட்டதாளிரண்டுள்ளேயிருத்துவதுண்மையென்ற[னே
வெளியிட்டடைத்துவைத்தேனினிமேலொன்றும்வேண்டில

---

* பரத்தையர்-அயல்மாதர்; வேசையர்.

## தாயாருக்குத் * தகனகிரியை செய்கையிற் பாடிய வெண்பா

ஐயிரண்டு திங்களா வங்கமெலா நொந்துபெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச்—செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பிற் காண்பே னினி. 1

முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட்சுமந்தே
அந்திபக லாச்சிவனை யாதரித்துத்—தொந்தி
சரியச் சுமந்துபெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழன்மூட்டு வேன். 2

வட்டிலிலுந் தொட்டிலிலு மார்மேலுந் தோண்மேலுங்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து—முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டுந் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டு வேன். 3

நொந்து சுமந்துபெற்று நோவாம லேந்திமுலை
தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே—அந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றுந் தாய்தனக்கோ
மெய்யிலே தீமூட்டு வேன். 4

அரிசியோ நானிடுவே னாத்தா டனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல்—உருசியுள்ள
தேனே யமிர்தமே செல்வத் திரவியபூ
மானே யெனவழைத்த வாய்க்கு. 5

அள்ளி யிடுவ தரிசியோ தாய்தலைமேற்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல்—மெள்ள
முகமேன் முகம்வைத்து முத்தாடி யென்றன்
மகனே யெனவழைத்த வாய்க்கு. 6

---

* தகனகிரியை - அக்கினி வைக்குந் தொழில்.

## கலிவிருத்தம்

* முன்னை யிட்டதீ § முப்பு ரத்திலே
பின்னை யிட்டதீ தென்னி லங்கையில்
அன்னை யிட்டதீ யடிவ யிற்றிலே
யானு மிட்டதீ மூள்க மூள்கவே. 7

## வெண்பா

வேகுதே தீயதனில் வெந்துபொடி சாம்பல்
ஆகுதே பாவியே னையகோ—மாகக்
குருவி பறவாமற் கோதாட்டி யென்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை. 8

வெந்தாளோ சோணகிரி † வித்தகா நின்பதத்தில்
வந்தாளோ வென்னை மறந்தாளோ—சந்ததமும்
உன்னையே நோக்கி யுகந்து வரங்கிடந்தென்
தன்னையே யீன்றெடுத்த தாய். 9


வீற்றிருந்தா ளன்னை வீதி தனிலிருந்தாள்
நேற்றிருந்தா ளின்றுவெந்து நீறானாள்—பாற்றெளிக்க
எல்லீரும் வாருங்க ளேதென் றிரங்காமல்
எல்லாஞ் சிவமயமே யாம். 10

## திருவிடைமருதூர்

மென்று விழுங்கி விடாய்கழிக்க நீர்தேடல்
என்று விடியுமெனக் கென்கோவே—நன்றி
கருதார் புரமூன்றுங் கட்டழலாற் செற்ற
மருதாவுன் சந்நிதிக்கே வந்து. 1

---

* இப்பாடலுக்குத் தேகத் தத்துவப்பொருள் காண்க.
§ முப்புரம் - திரிபுரம்; தேகம்.
† வித்தகா - விளிவேற்றுமை.



பட்டினத்தாரின் அருட்பெருமை வெளிப்பட
கழுமரம் பற்ற, அரசன் சிறப்புறல்

## திருவொற்றியூர்

கண்டங் கரியதாங் கண்மூன் றுடையதாம்
அண்டத்தைப் போல வழகியதாந்—தொண்டர்
உடலுருகத் தித்திக்கு மோங்குபுக ழொற்றிக்
கடலருகே நிற்குங் கரும்பு. 2

ஒடுவிழுந்து சீப்பாயு மொன்பதுவாய்ப் புண்ணுக்
கிடுமருந்தை யானறிந்து கொண்டேன்—கடுவருந்துந்
தேவாதி தேவன் திருவொற்றி யூர்த்தெருவில்
போவா ரடியிற் பொடி. 3

வாவியெல்லாந் தீர்த்த மணலெல்லாம் வெண்ணீறு
காவணங்க ளெல்லாங் கணநாதர்—பூவுலகில்
ஈது சிவலோக மென்றென்றே மெய்த்தவத்தோர்
ஓதுந் திருவொற்றி யூர். 4

## * திருவாரூர்

ஆரூ ரிங்கிருக்க வவ்வூர்த் திருநாளென்
றூரூர்க டோறு முழலுவீர்—நேரே
உளக்குறிப்பை நாடாத வூமர்கா ணீவிர்
விளக்கிருக்கத் தீத்தேடு வீர். 5

எருவாய்க் கிருவிரன் மேலேறுண் டிருக்குங்
கருவாய்க்கோ கண்கலக்கப் பட்டாய்—திருவாரூர்த்
தேரோடும் வீதியிலே செத்துக் கிடக்கின்றாய்
நீரோடும் தாரைக்கே நீ. 6

## திருக்காஞ்சி

எத்தனையூ ரெத்தனைவீ டெத்தனைதாய் பெற்றவர்கள்
எத்தனைபே ரிட்டழைக்க வேனென்றேன்—நித்தம்
எனக்குக் களையாற்றா யேகம்பா கம்பா
உனக்குத் திருவிளையாட் டோ. 7

---

* திருவாரூர் : தென்கைலாயம்; லக்ஷிமி தவஞ்செய்த தலம்.

## திருக்காரோணம்

அத்தி முதலெறும்பீ றானவுயி ரத்தனைக்குஞ்
சித்த மகிழ்ந்தளிக்குந் தேசிகா—மெத்தப்
பசிக்குதையா பாவியேன் பாழ்வயிற்றைப் பற்றி
இசிக்குதையா காரோண ரே. 8

## திருக்காளத்தி

பொய்யை யொழியாய் * புலாலைவிடாய் காளத்தி
ஐயரே யென்னு யறஞ்செய்யாய்—வெய்ய
சினமே யொழியாய் திருவெழுத் தைந்தோதாய்
மனமே யுனக்கென்ன மாண்பு. 9

## திருவிருப்பையூர்

மாதா வுடல்சலித்தாள் வல்வினையேன் கால்சலித்தேன்
வேதாவுங் கைசலித்து விட்டானே—நாதா
இருப்பையூர் வாழ்சிவனே யின்னமோ ரன்னை
கருப்பையூர் வாராமற் கா. 10

## § திருவையாறு

மண்ணுந் தணலாற வானும் புகையாற
எண்ணரிய தாயு மிளைப்பாறப்—பண்ணுமயன்
கையா றவுமடியேன் காலாற வுங்கண்பார்
ஐயா திருவை யாறு. 11

## திருக்குற்றாலம்

காலன் வருமுன்னே கண்பஞ் சடைமுன்னே
பாலுண் கடைவாய் படுமுன்னே—மேல்விழுந்தே
உற்றா ரழுமுன்னே யூரார் சுடுமுன்னே
குற்றாலத் தானையே கூறு. 12

---

* புலால்-மாமிசம்.

§ திருவையாறு - பஞ்சநதிகள் பாயுந்தலம்; திரு - அழகிய, ஐ ஆறு-ஐந்தாகிய புண்ணிய நதிகள் கலந்தவிடம்.

TAMIL NADU ARCHIVES LIBRARY No. EGMORE, MADRAS 600 008 ௵2493

## திருவெண்காட்டுத் திருவிசைப்பா

பூதமுங் காணம் பொறிகளோம் புலனும் பொருந்திய குணங்களோர் மூன்றும், நாதமுங் கடந்த வெளியிலே நீயு நானுமாய் நிற்குநா ளுளதோ, வாதமுஞ் சமய பேதமுங் கடந்த மனோலய வின்ப சாகரமே, ஏதுமொன் றறியேன் யாதுநின் செயலோ யிறைவனே யேகநா யகனே. 13

யாவரே யிருந்தும் யாவரே வாழ்ந்தும் யாவரே யெமக்குற வாயுந், தேவரீ ரல்லாற் றிசைமுக மெனக்குத் திருவுள மறியவே றுளதோ, பாவலனொருவன் செந்தமிழ்க் கிரங்கிப் பாவையா ருடலை மாற்ற, ஏவலா ளாகி யிரவெலா முழன்ற விறைவனே யேகநா யகனே. 14

உண்டதே யுண்டு முடுத்ததே யுடுத்து மடுத்தடுத் துரைத்ததே யுரைத்துங், கண்டதே கண்டுங் கேட்டதே கேட்டுங் கழிந்தன கடவுணாளெல்லாம், விண்டதா மரைமே லன்னம்வீற் றிருக்கும் விழவரு திவெண் காடா, அண்டரே போற்ற வம்பலத்தாடு மையனே யுய்யுமாறருளே. 15

### பொது

சிற்றம் பலமுஞ் சிவனு மருகிருக்க
வெற்றம் பலந்தேடி விட்டோமே—நித்தம்
பிறந்திடத்தைத் தேடுதே பேதைமட நெஞ்சங்
கறந்திடத்தை நாடுதே கண். 1

தோடவிழும் பூங்கோதைத் தோகையுனை யிப்போது
தேடினவர் போய்விட்டார் தேறியிரு—நாடிநீ
என்னை நினைத்தா லிடுப்பி லுதைப்பேனுன்
உன்னை நினைத்தா லுதை. 2

வாசற் படிகடந்து வாராத பிச்சைக்கிங்
காசைப் படுவதில்லை யண்ணலே—யாசைதனைப்

பட்டிறந்த காலமெலாம் போதும் * பரமேட்டி
சுட்டிறந்த ஞானத்தைச் சொல். 3

§ நச்சரவம் பூண்டானை நன்றாய்த் தொழுவதுவும்
இச்சையிலே தானங் கிருப்பதுவும்—பிச்சைதனை
வாங்குவது முண்பதுவும் வந்துதிரு வாயிலிலே
தூங்குவதுந் தானே சுகம். 4

இருக்கு மிடந்தேடி யென்பசிக் கேயன்னம்
உருக்கமுடன் கொண்டுவந்தா லுண்பேன்—பெருக்க
அழைத்தாலும் போகே னரனே யென்தேகம்
இளைத்தாலும் போகே னினி 5

விட்டுவிடப் போகுதுயிர் விட்டவுட னேயுடலைச்
சுட்டுவிடப் போகிறார் சுற்றத்தார்—பட்டதுபட்
டெங்கே ரமுஞ்சிவனை யேத்துங்கள் போற்றுங்கள்
சொன்னே னதுவே சுகம். 6

ஆவியொடு காய மழிந்தாலு மேதினியில்
பாவியென்று நாமம் படையாதே—மேவியசீர்
வித்தா ரமுங்கடம்பும் வேண்டா மடநெஞ்சே
செத்தாரைப் போலே திரி. 7

## பின்முடுகு வெண்பா

இப்பிறப்பை நம்பி யிருப்பாரோ நெஞ்சகமே
வைப்பிருக்க வாயின் மனையிருக்கச்—சொப்பனம்போல்
விக்கிப்பற் கிட்டக்கண் மெத்தப்பஞ் சிட்டப்பைக்
கக்கிச்செத் துக்கொட்டக் கண்டு. 8

மேலு மிருக்க விரும்பினையே வெள்விடையோன்
¶ சீல மறிந்திலையே சிந்தையே—கால்கைக்குக்

---

* பரமேட்டி - இறைவன். ¶ சீலம் - ஆசாரம்.
§ நச்சரவம் - விஷமுடைய பாம்பு; நஞ்சு+அரவம்

கொட்டையிட்டு மெத்தையிட்டுக் குத்திமொத்தப் பட்டவு
கட்டையிட்டுச் சுட்டுவிடக் கண்டு. [டல்

ஒன்பதுவாய்த் தோற்பைக் கொருநாளைப் போலவே
அன்புவைத்து நெஞ்சே யலைந்தாயே—வன்கழுக்கள்
தத்தித்தத் திச்சட்டை தட்டிக்கட் டிப்பிட்டுக்
கத்திக்குத் தித்தின்னக் கண்டு. 10

இன்னம் பிறக்க விசைவையோ நெஞ்சமே
மன்னரிவ ரென்றிருந்து வாழ்ந்தவரை—முன்னம்
எரிந்தகட்டை மீதி லிணைக்கோ வணத்தை
உரிந்துருட்டிப் போட்டது கண்டு. 11

முதற்சங் கமுதூட்டு மொய்குழலார் தம்மை
நடுச்சங்க நல்விலங்கு பூட்டுங்—கடைச்சங்கம்
ஆம்போ தனவூது மம்மட்டோ விம்மட்டோ
நாம்பூமி வாழ்ந்த நலம். 12

எத்தனைநாள் கூடி யெடுத்த சரீரமிவை
அத்தனையு மண்டின்ப தல்லவோ—வித்தகனார்
காலைப் பிடித்துமெள்ளக் கங்குல்பக லற்றிடத்தே
மேலைக் குடியிருப்போ மே. 13

எச்சிலென்று சொல்லி யிதமகிதம் பேசாதே
எச்சி லிருக்கு மிடமறியீர்—எச்சிறனை
உய்த்திருந்து பார்த்தா லொருமை வெளிப்படும்பின்
சித்த நிராமயமா மே. 14

எத்தனைபேர் நட்டகுழி யெத்தனைபேர் தொட்டமுலை
எத்தனைபேர் பற்றி யிழுத்தவிதழ்—நித்தநித்தம்
பொய்யடா பேசும் புவியின்மட மாதரைவிட்
டுய்யடா வுய்யடா வுய். 15

இருப்பதுபொய் போவதுமெய் யென்றெண்ணி நெஞ்சே
ஒருத்தருக்குந் தீங்கினை * யுன்னாதே—பருத்ததொந்தி
நம்மதென்று நாமிருப்ப நாய்நரிகள் பேய்கழுகு
தம்மதென்று தாமிருக்குந் தான். 16

எத்தொழிலைச் செய்தாலு மேதவத்தைப் பட்டாலும்
‡ முத்தர் மனமிருக்கு § மோனத்தே—வித்தகமாய்க்
காதிவிளை யாடியிரு கைவீசி வந்தாலுந்
தாதிமன நீர்க்குடத்தே தான். 17

மாலைப் பொழுதின்று மஞ்சளரைத் தேகுளித்து
வேளை மினக்கிட்டு விழித்திருந்து—சூலாகிப்
பெற்றாள் வளர்த்தாள் பெயரிட்டாள் பெற்றபிள்ளை
¶ பித்தானா லென்செய்வாள் பின். 18

## சிலர் வேண்டுகோளால்

# ஓர் கலியாணவீட்டிற் சென்று

## தம்பதிகளைப் பார்த்துப் பாடிய

## திருவிருத்தம்

நாப்பிளக்கப் பொய்யுரைத்து நவநிதியந் தேடி
நலமொன்று மறியாத நாரியரைக் கூடிப்
பூப்பிளக்க வருகின்ற புற்றீசல் போலப்
புலபுலெனக் கலகலெனப் புதல்வர்களைப் பெறுவீர்
காப்பதற்கும் வகையறியீர் கைவிடவு மாட்டீர்
† கவர்பிளந்த மரத்துளையிற் கானுழைத்துக் கொண்டே
ஆப்பதனை யசைத்துவிட்ட குரங்கதனைப் போல
அகப்பட்டீர் கிடந்துழல வகப்பட் டீரே.

---

* உன்னாதே-எண்ணாதே. ‡ முத்தர்-முத்திக்குரியவர்.
§ மோனம்-மௌனம்; நிலை, ¶ பித்து-பைத்தியம்,
† கவர்பிளந்த - இரண்டாகப் பிளந்த.



பட்டினத்தார் தாயாருக்கு ஈமக்கடன்
கொளுவி நடத்தல்

# உடற்கூற்று வண்ணம்

திருச்சிற்றம்பலம்

தனதனதான தனதனதான
தந்ததனந்தன தந்ததனந்த
தனனதனந்த தனனதனந்த
தானனதானன தானனதந்த—
தந்ததனதான தனதானனு.

* ஒருமடமாது மொருவனுமாகி
யின்பசுகந்தரு மன்புபொருந்தி
யுணர்வுகலங்க வொழுகியவிந்து
வூறுசுரோணித மீதுகலந்து—
பனியிலொர்பாதி சிறுதுளிமாது
பண்டியில்வந்துபு குந்துதிரண்டு
பதுமவரும்பு கமடமிதென்று
பார்வைமெய்வாய்செவி கால்கைகளென்ற—
உருவமுமாகி யுயிர்வளர்மாத
மொன்பதுமொன்றுநி றைந்துமடந்தை
‡ யுதரமகன்று புவியில்விழுந்து
யோகமும்வாரமு நாளுமறிந்து—
மகளிர்கள்சேனை தரவணையாடை
மண்படவுந்தியு தைந்துகவிழ்ந்து
மடமயில்கொங்கை யமுதமருந்தி
யோரறிவீரறி வாகிவளர்ந்து—
ஒளிநகையூற லிதழ்மடவாரு
வந்துமுகந்திட வந்துதவழ்ந்து
மடியிலிருந்து மழலைமொழிந்து
வாவிருபோவென நாமம்விளம்ப—

* ஒருமடமாது-என்றும் மாறு இளமைபூண்ட பார்வதி.
‡ உதரம் - வயிறு.

உடைமணியாடை யரைவடமாட
வுண்பவர் தின்பவர் தங்களொடுண்டு
தெருவிலிருந்து புழுதியளைந்து
தேடியபாலரொ டோடிநடந்து—
அஞ்சுவயதாகி விளையாடியே. 1/4

உயர்தருஞான குருவுபதேச
முந்தமிழின்கலை யுங்கரைகண்டு
வளர்பிறையென்று பலரும்விளம்ப
வாழ்பதினாறு பிராயமும்வந்து—
மயிர்முடிகோதி யறுபதநீல
வண்டிமிர் தண்டொடை கொண்டைபுனைந்து
மணிபொனிலங்கு பணிகளணிந்து
மாகதர்போகதர் கூடிவணங்க—
மதனசொரூப னிவனெனமோக
மங்கையர்கண்டு மருண்டுதிரண்டு
வரிவிழிகொண்டு சுழியவெறிந்து
மாமயில்போல்வர் போவதுகண்டு—
மனதுபொறும லவர்பிறகோடி
மங்கலசெங்கல சந்திகழ்கொங்கை
மருவமயங்கி யிதழமுதுண்டு
தேடியமாமுதல் சேரவழங்கி—
ஒருமுதலாகி முதுபொருளாயி
ருந்ததனங்களும் வம்பிலிழந்து
மதனசுகந்த விதனமிதென்று
* வாலிபகோலமும் வேறுபிரிந்து—
வளமையுமாறி யிளமையுமாறி
வன்பல்விழுந்திரு கண்களிருண்டு
வயதுமுதிர்ந்து நரைதிரைவந்து
வாதவிரோத குரோதமடைந்து—
செங்கையினிலோர் தடியுமாகியே. 1/2

* வாலிபகோலம் - இள வயதின் அழகு.

வருவதுபோவ தொருமுதுகூனு
மந்தியெனும்படி குந்திநடந்து
மதியுமழிந்து செவிதிமிர்வந்து
வாயறியாமல் விடாமன்மொழிந்து—
துயில்வருநேர மிருமல்பொருது
தொண்டையுநெஞ்சமு லர்ந்துவறண்டு
துகிலுமிழந்து சுணையுமழிந்து
தோகையர்பாலர்கள் கோரணிகொண்டு—
கலியுகமீதி லிவர்மரியாதை
கண்டிடுமென்பவர் * சஞ்சலமிஞ்ச
கலகலவென்று மலசலம்வந்து
கால்வழிமேல்வழி சாரநடந்து—
தெளிவுமிராம னுரைதடுமாறி
சிந்தையுநெஞ்சமு லைந்துமருண்டு
திடமுமுலைந்து மிகவுமலைந்து
தேறிநலாதர வேதெனநொந்து—
மறையவன்வேத னெழுதியவாறு
வந்ததுகண்டமு மென்றுதெளிந்து
இனியெனகண்ட மினியெனதொந்த
§ மேதினிவாழ்வினி லாதினிநின்ற—
கடன்முறைபேசு மெனவுரைநாவு
றங்கிவிழுந்துகை கொண்டுமொழிந்து
கடைவழிகஞ்சி யொழுகிடவந்து
பூதமுநாலுசு வாசமுநின்று—
நெஞ்சுதடுமாறி வருநேரமே. 14

வளர்பிறைபோல வெயிறுமுரோம
முஞ்சடையுஞ்சிறு குஞ்சியும்விஞ்ச
மனதுமிருண்ட வடிவுமிலங்க
மாமலைபோல்யம தூதர்கள்வந்து—

---

* சஞ்சலம் - மனக்கஷ்டம்.

§ மேதினி - பூமி.

வலைகொடுவீசி யுயிர்கொடுபோக
ஐமன்தரும்வந் தருகு னிந்தழநொந்து
மடியில்விழுந்து மனைவிபுலம்ப
மாழ்கினரேயிவர் காலமறிந்து—

பழையவர்காணு மெனுமயலார்கள்
பஞ்சுபறந்திட நின்றவர்பந்த
ரிடுமெனவந்து பறையிடமுந்த
வேபிணம்வேக விசாரியுமென்று—

பலரையுமேவி முதியவர்தாமி
ருந்தசவங்கழு வுஞ்சிலரென்று
பணிதுகில் * தொங்கல் களபமணிந்து
பாவகமேசெய்து நாறுமுடம்பை—

வரிசைகெடாம லெடுமெனவோடி
வந்திளமைந்தர் குளிந்துசுமந்து
கடுகிநடந்து சுடலையடைந்து
மானிடவாழ்வென வாழ்வெனநொந்து—

விறகிடமூடி யழல்கொடுபோட
வெந்துவிழுந்துமு றிந்துநிணங்க
ளுருகியெலும்பு கருகியடங்கி
யோர்பிடிநீறுமி லாதவுடம்பை—
நம்புமடியேனை யினியாளுமே. 1

திருச்சிற்றம்பலம்

## பட்டினத்துப்பிள்ளையார் திருநட்சத்திர தினம்

ஆடியுத்தி ராட மருட்சிவத்திற் பட்டினத்தார்
நாடியறக் கலந்த நாள். திரு. வி. க.

பட்டினத்துப்பிள்ளையார் திருப்பாடற்றிரட்டு முற்றிற்று.

---

* தொங்கல் - மாலை.

உ

திருச்சிற்றம்பலம்

சேந்தனார் அருளிய

# திருப்பல்லாண்டு

கோயில் - பண் - பஞ்சமம்

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனியெல் லாம்விளங்க
அன்னநடை மடவா ளுமைகோ னடியோமுக்
கருள் புரிந்து
பின்னைப் பிறவியறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே. 1

மிண்டு மனத்தவர் போமின்கண் மெய்யடியார்கள்
விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி யீசற்காட்
செய்மின் குழாம்புகுந்
தண்டங் கடந்த பொருளள வில்லதோ
ரானந்த வெள்ளப்பொருள்
பண்டு மின்று மென்று முள்ள பொருளென்றே
பல்லாண்டு கூறுதுமே. 2

நிட்டையி லாவுட லீத்தென்னை யாண்ட
நிகரிலா வண்ணங்களுஞ்
சிட்டன் சிவனடி யாரைச் சீராட்டுந்
திறங்களுமே சிந்தித்
தட்ட மூர்த்திக்கென் னகநெக வூறு
மமிர்தினுக் காலநிழற்
பட்டனுக் கென்னைத்தன் பாற்படுத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. 3

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சில தேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரண்மேரு விடங்கன்
விடைப் பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. 4

புரந்தரன் மாலயன் பூசலிட் டோலமிட்
டின்னம் புகலரிதா
யிரந்திரந் தழைப்ப வென்னுயிராண்ட கோவினுக்
கென்செய வல்லமென்றுங்
கரந்துங் கரவாத கற்பக னாகிக்
கரையில் கருணைக்கடல்
பரந்து நிரந்தும் வரம்பிலாப் பாங்கற்கே
பல்லாண்டு கூறுதுமே. 5

சேவிக்க வந்தய னிந்திரன் செங்கண்மா
லெங்குந் திசைதிசையன்
கூவிக் கவர்ந்து நெருங்கிக் குழாங்குழா
மாய்நின்று கூத்தாடு
மாவிக் கமுதையென் னார்வத் தனத்தினை
யப்பனை யொப்பமரர்
பாவிக்கும் பாவகத் தப்புறத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. 6

சீருந் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீ
ழாரும் பெறாத வறிவுபெற் றேன்
பெற்றதார் பெறுவாருலகி
லூரு முலகுங் கழற வுழறி
யுமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பு மறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே. 7

சேலுங் கயலுந் திளைக்குங் கண்ணாரிளங்
கொங்கையிற் செங்குங்குமம்
போலும் பொடியணி மார்பிலங்கு மென்று
புண்ணியர் போற்றிசைப்ப
மாலு மயனு மறியா நெறிதந்து
வந்தென் மனத்தகத்தே
பாலு மமுதமு மொத்துநின் றானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. 8

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கட லீந்தபிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னு
ளாலிக்கு மந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. 9

தாதையைத் தாளற வீசிய சண்டிக்கு
மண்டத் தொடுமுடனே
பூதலத் தோரும் வணங்கப்பொற் கோயிலும்
போனகமு மருளிச்
சோதி மணிமுடித் தாமமும் நாமமுந்
தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. 10

குழலொலி யாழொலி கூத்தொலி யேத்தொலி
யெங்குங் குழாம்பெருகி
விழவொலி விண்ணள வுஞ்சென்று விம்மி
மிகுதிரு வாரூரின்
மழவிடை யாற்கு வழிவழி யாளாய்
மணஞ்செய் குடிப்பிறந்த
பழவடி யாரொடுங் கூடியெம் மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. 11

ஆரார் வந்தா ரமரர் குழாத்தி
லணியுடை யாதிரைநாள்
நாரா யணனொடு நான்முக னங்கி
யிரவியு மிந்திரனும்
தேரார் வீதியிற் றேவர் குழாங்க
டிசையனைத்து நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் மாடியும்
பல்லாண்டு கூறுதுமே. 12

எந்தை யெந்தாய் சுற்றமுற்று மெமக்கமுதா
மெம்பிரா னென்றென்று
சிந்தைசெய் யுஞ்சிவன் சீரடி யாரடி
நாய் செப்புரை
யந்தமி லானந்தச் சேந்த னெனைப்புகுந்
தாண்டுகொண் டாருயிர்மேற்
பந்தம் பிரியப் பரிந்தவனே யென்று
பல்லாண்டு கூறுதுமே. 13

திருச்சிற்றம்பலம்

சேந்தனார் திருப்பல்லாண்டு முற்றிற்று.

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 102493
EGMORE, MADRAS-600 008

திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் எழுதிய
விருத்தியுரை அடங்கியுள்ள
பட்டினத்தடிகள் திருப்பாடற்றிரட்டு
பத்திரகிரியார் திருப்புலம்பல்
மூலமும் - உரையும்
ஐதீகப்படங்களுடன் :: இதன் விலை ரூபா 4.
பூமகள் பதிப்பை கவனித்து வாங்கவும்.